Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 02 வியாழக்கிழமை (17.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 364

## மருதனார்மடம் கொத்தணி 68 ஆக அதிகரிப்பு

### நேற்றும் 10 பேருக்கு தொற்று

*(யாழ்ப்பாணம்)* மருதனார்மடம் கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய மேலும் 10 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன்மூலம் மருதனார்மடம் கொரோனா கொத்தணி 68ஆக அதிகரித்துள்ளது. *(19ஆம் பக்கம் பார்க்க)*

## கொரோனா நிலைமையைப் பொறுத்து 22, 23 ஆம் திகதிகளில் அடுத்த கட்ட முடிவு

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



(கொழும்பு)

நாட்டின் தற்போதைய கொரோனா தொற்று நிலைமைக்கு ஏற்ப மேலும் எடுக்க வேண்டிய முடிவுகள் எதிர்வரும் 22 மற்றும் 23ஆம் திகதிகளில் அறிவிக்கப்படும் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். 19

## மகாஜன மாணவிகள் இருவருக்கு கொரோனா

### மாணவிகள், ஆசிரியர்கள் உட்பட 80க்கு மேற்பட்டோர் தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்கும் மாணவிகள் இருவருக்கு நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் 19

## சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி சுயதனிமையில்

(யாழ்ப்பாணம்)

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி சுயதனிமைக்கு உட்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

மருதனார்மடம் கொத் தணியில் 19

## சங்கானை மீன், மரக்கறி சந்தைகள் மூடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

சங்கானை மரக்கறிச் சந்தை மற்றும் மீன் சந்தை ஆகிய இரண்டும் மறு அறிவித்தல் 19

## திருநெல்வேலி பொதுச் சந்தையில் 313 வியாபாரிகளுக்கு பி.சி.ஆர் பரிசோதனை

8ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாநகர சபையின் 2021 வரவு - செலவுத் திட்டம் 2ஆவது முறையாக தோற்கடிப்பு

### பதவி இழந்தார் ஆனல்ட்

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் 2ஆவது தடவையாகவும் தோற்கடிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து மாநகர முதல்வர் ஆனல்ட் பதவி இழந்துள்ளார்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் மாநகர முதல்வர் இம்மானு 19



## கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்தில் பராமரிக்க வந்த உறவினர்கள் நால்வருக்கு தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த கொரோனா தொற்றாளர்களை பராமரிக்க 19

## கோவிட் - 19 தொற்றால் மேலும் ஆறு பேர் பலி

### உயிரிழப்பு 160 ஆக உயர்வு

(கொழும்பு)

நாட்டில் கோவிட் - 19 தொற்றால் மேலும் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று புதன்கிழமை அறிவித் 19

## எல்.பி.எல் கிரிக்கெட் தொடர் யாழ். அணி சம்பியன்



19ஆம் பக்கம் பார்க்க

## சுன்னாகம் பொதுச் சந்தை

### இன்றும் நாளையும் மூடப்படுவதாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட சுன்னாகம் 19

### தொற்றுக்கு மக்களே காரணம்

## கொரோனா கொத்தணி வடக்கில் இல்லை

### ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸ்

(கொழும்பு)

வட மாகாணம் கொரோனா தொற்று அபாயத்தில் இருப்பதற்கு காரணம் 19

### வவுனியாவில் தொற்று அதிகரிப்பு
# தனியார் கல்வி நிலையங்கள் அனைத்தையும் மூடுங்கள்
## நகரசபைத் தவிசாளர் உத்தரவு

(வவுனியா)

கோவிட்-19 தாக்கம் வவுனியாவில் அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு நகரில் அமைந்துள்ள அனைத்து தனியார் கல்வி நிலையங்கள் மற்றும், பிரத்தியேக வகுப்புக்களை உடனடியாக இடைநிறுத்துமாறு வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இன்று கருத்து தெரிவித்த அவர்,

வவுனியா மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துச்செல்கின்றது. இதனை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம். அந்தவகையில் நகரிற்குட்பட்ட தனியார் கல்விநிலையங்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புக்களின் கல்விச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு உரிய தரப்புகளிற்கு அறிவித்தல் விடுக்கின்றோம்.

கொரோனா தாக்கத்தை கருத்தில் கொண்டு ஏற்கனவே தனியார் கல்வி நிலையங்களின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் பலர் இரகசியமான முறையில் மாணவர்களை வரவழைத்து கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

எனவே குறித்த உத்தரவுகளை மீறி அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் மீது சட்டரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரியப்படுத்திக் கொள்கின்றோம் என்று தெரிவித்தார். (ம-03,299)

# தவறான வழிநடத்தலினாலேயே சிறையில் கைதிகளாக இருக்கின்றார்கள்
### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(வவுனியா)

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் எதனையும் விடுதலைப்போராட்டமாக நான் கருதவில்லை. தவறான வழி நடத்தலினாலேயே சிறையில் கைதிகளாக இருக்கிறார்கள் என்று கடற்தொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியாவிற்கு நேற்று விஜயம் செய்த அவர் போகஸ்வெவ பகுதியில் மின் இணைப்பு பணியை ஆரம்பித்து வைத்திருந்தார். அதன் பின்னர் தனியார் விருந்தினர் விடுதியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

நானும் ஒரு அரசியல் கைதியாக இருந்து எங்களை நாங்கள் விடுவித்தவர்கள். 1983 ஆம் ஆண்டு சிறை உடைப்பு மூலம் யாரையும் நம்பாமல் நாங்களே விடுவித்தோம்.

பின்னர் இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் எமக்கு பொது மன்னிப்பு கிடைத்தது. அந்த ஒப்பந்தம் ஒரு பொன்னான வாய்ப்பு. அந்த ஒப்பந்தத்தின் பிறகு எதனையும் விடுதலை போராட்டமாக நான் கருதவில்லை. அன்றிலிருந்து இதனை சொல்லிவருகிறேன்.

எனினும் தவறான வழிநடாத்தலால் அவர்கள் கைதிகளாக இருக்கின்றமையால் அவர்களும் விடுவிக்கப்பட வேண்டும். அதற்கான முயற்சியை செய்வேன். அவர்களில் என்னை கொல்ல வந்தவர்களும் இருக்கின்றனர். எனக்கு அதிக ஆசனங்களை தந்திருந்தால் இதனை இலகுவாக தீர்த்திருக்கலாம் என்றார். (ம-03)

# தப்பியோடிய கொரோனா நோயாளி சிக்கினார்

(கொழும்பு)

வெலிசறை சுவாச நோய்க்கான தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தப்பியோடிய கொரோனா நோயாளி பொலிஸாரிடம் சிக்கியுள்ளார்.

கிராண்ட்பாஸ் பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய குறித்த நபர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை தப்பிச் சென்றுள்ளார்.

இந்நிலையில், தப்பியோடிய கொரோனா நோயாளியை கைது செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்ட பொலிஸாரினால் நபரின் புகைப்படமொன்று சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்டது.

இந்நிலையில் குறித்த நபர் மருதானையில் வைத்து நேற்று மாலை பொலிஸாரிடம் சிக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

# சட்டவாதிக்கு கொரோனா; நீதிபதிக்கு பி.சி ஆர்

(வவுனியா)

வவுனியா நீதிமன்றில் பணியாற்றும் அரச சட்டவாதி ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கல்முனையை சேர்ந்த அவருக்கு நேற்று முன்தினம் பி.சி. ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. எனினும் குறித்த சட்டவாதி வவுனியாவிலிருந்து கல்முனைக்கு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பான விசாரணைகளை சுகாதார துறையினர் முன்னெடுத்து வருகின்றனர். இதேவேளை வவுனியா நீதிமன்ற செயற்பாடுகள் ஏற்கனவே மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன், நீதிமன்றத்தின் நீதிபதி மற்றும் ஏனைய ஊழியர்களுக்கும் பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ம-03,299)


மணிவிழா நாளில்
பணிநயந்து வாழ்த்துகின்றோம்



Congratulations

திரு.
பாலகிருஸ்ணன்
சிவஞானம் JP
(Trd. Eng. Spl.) (SLTS-1)

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (ஆங்கிலம்)
வளவாளர் - இரண்டாம் மொழி சிங்களம்
( வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி )

சேவை விபரம்

கிளி/ஜெயபுரம் மகா வித்தியாலயம் -ஆசிரியர் (1990 - 1998)
தி/பேரோறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம், கந்தளாய். - ஆசிரியர் (1998 -2003)
கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம் -ஆசிரியர் (2003 - 2011)
வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி - சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (2011 - 2020)

கல்வித் துறையில் முப்பது ஆண்டுகள் மகத்தான பணியாற்றி
இன்றுடன் ஓய்வு பெறும் மணிவிழா நாயகனை
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள்
வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி.


# தனியார்துறை ஊழியர்களுக்கு குறைந்த வட்டியில் கடன்
### ஜனாதிபதி கோட்டாபய அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பண்டிகை காலத்தில், தனியார் துறையில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் பண்டிகைக் கால கடன் வழங்கும் முறையொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் பிரதேச அபிவிருத்தி வங்கிகளின் ஊடாக இந்த கடனுதவிகளை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் துறைகளில் பணியாற்றுவோர், தமது நிறுவனத்தின் பிரதம அதிகாரியின் கையெழுத்துடனான விண்ணப்பத்தை, அருகிலுள்ள அரச வங்கிகளில் கையளிப்பதன் ஊடாக இந்த கடனுதவியை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, முச்சக்கரவண்டி, பாடசாலை வான்கள், பேருந்து உரிமையாளர்கள் மற்றும் தனியார் பேருந்துகளில் பணிபுரியும் பணியாளர்கள், அரச வங்கிகளில் வங்கி கணக்குகளை வைத்திருக்கும் பட்சத்தில், அவர்களும் இந்த கடனுதவியை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

அதேபோன்று, குறித்த பிரிவைச் சேராதவர்கள், அரச வங்கிகளில் வங்கி கணக்குகளை வைத்திருந்தால், அவர்களும் இந்த பண்டிகை கால கடனை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், ஓய்வு பெற்றோர் மற்றும் சமுர்த்தி பெறுவோருக்கு, ஓய்வூதிய திணைக்களம் மற்றும் சமுர்த்தி வங்கிகளின் ஊடாக கடன் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் நத்தார் மற்றும் புதுவருடம் ஆகியவற்றை முன்னிட்டு, பண்டிகை கால கடன் அடிப்படையில் 0.625 வீத வட்டியின் கீழ் 10 மாதங்களில் செலுத்தி முடிக்கும் வகையில் இந்த கடன் வழங்கப்படவுள்ளது.

மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாவிற்கு அதிக வருமானத்தை பெறுவோருக்கு 50 ஆயிரம் ரூபாவும், மாதாந்தம் 25 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ரூபா வரை பெறுவோருக்கு 25 ஆயிரம் ரூபாவும், மாதாந்தம் 25 ஆயிரம் ரூபாவிற்கு குறைவான வருமானத்தை பெறுவோருக்கு 10 ஆயிரம் ரூபாவும் கடனாக வழங்கப்படவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம-03)

# 2 ஆவது நாளாக தொடரும் மீனவர்களின் போராட்டம்



(மன்னார்)

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைகளால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக தெரிவித்து முல்லைத்தீவு மீனவர்கள் நேற்று முன்தினம் ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டமானது நேற்று இரண்டாவது நாளாகவும் இடம் பெற்று வருகின்றது.

அண்மைய நாட்களாக முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் இழுவை படகுகளின் அத்துமீறிய செயல் காரணமாக தொடர்ச்சியாக தமது வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படுவதாகவும் இந்திய-இலங்கை அரசாங்கங்கள் உரிய வகையில் பேச்சுவார்த்தைகளை நடத்தி எல்லை மீறி தமது பகுதிகளில் வருகின்ற மீன்பிடி படகுகளை கட்டுப்படுத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி தமக்கு தமது வாழ்வாதாரத் தொழிலை நிம்மதியாக செய்வதற்கான சூழலை ஏற்படுத்தித் தருமாறு கோரி தொடர் கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பித்த நிலையில் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எல்லை தாண்டி வருகின்ற மீனவர்களை கட்டுப்படுத்த இலங்கை கடற்படையினர் எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை எனவும் உரிய வகையில்எல்லை தாண்டி வந்தவர்களை கட்டுப்படுத்தினால் எமது வாழ்வாதாரத் தொழிலை சிறந்த முறையில் செய்து கொண்டு இருக்க முடியும் எனவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (நி-281)

# காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது? இலங்கை அரசு பொறுப்புக் கூறவேண்டும்

## ஜஸ்மின் சூக்கா திட்டவட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதியும் இராணுவத் தளபதியும் காணாமற்போன நூற்றுக்கணக்கான தமிழர்கள் மற்றும் சிங்களவர்கள் குறித்து சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சட்டத்தின்படி பொறுப்புக்கூற வேண்டியவர்கள் என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான திட்டம் அறிவித்துள்ளது.

காணாமறபோனவர்கள் பற்றிய அலுவலகத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையின் படி இறுதிக் கட்டப் போரில் 330 தமிழர்களும் 1989 இன் இறுதிக் காலாண்டுப் பகுதியில் 154 சிங்களவர்கள் காணாமற் போனதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் காணாமற் போனவர்கள் பற்றிய இந்த அலுவலகத்தின் அறிக்கையில் பெரியளவில் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளன என்றும் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது. எங்கு இருக்கின்றார்கள் என்ற உண்மையைக் கண்டறிவதற்கான உரிமை அவர்களின் குடும்பங்களுக்கு உண்டு என குறித்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

அத்துடன் வலிந்து காணாமற் போதல் என்பது ஒரு குற்றம் என்பதனால் இறுதிப் போரில் கட்டளைப் பொறுப்பில் இருந்த இராணுவ அதிகாரிகளும் யாருடைய பொறுப்பின் கீழ் அவர்கள் சரணடைந்தார்களோ அந்த அதிகாரிகள் சரணடைந்த நூற்றுக்கணக்கான தமிழர்களை எவ்வாறு தொலைந்து போக விட்டார்கள் என்பதைப் பற்றி விளக்கம் தருவதற்கான சட்ட ரீதியான கடப்பாடு உண்டு என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-4)

# மக்களின் செயற்பாட்டைப் பொறுத்தே முடக்கம் தொடர்பில் முடிவு எடுக்கப்படும்

(கொழும்பு)

நத்தார் வார இறுதியில் மேற்கு மாகாணத்தில் நுழையவோ அல்லது வெளியேறவோ, மாகாணத்திற்குள் ஊரடங்கு உத்தரவினையோ அல்லது முடக்கலை விதிக்கவோ, பயணக்கட்டுப்பாடுகளை விதிக்கவோ விரும்பவில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எவ்வாறாயினும், பண்டிகை வார இறுதிக்கு இன்னும் ஒரு வாரம் இருப்பதால் நிலைமை மறுபரிசீலனை செய்யப்படும்.

தற்போதுள்ள நிலைமை தொடர்ந்தால், எந்தவிதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்படாது. எல்லாம் பொதுமக்களின் கைகளிலேயே உள்ளது.

அடுத்த ஏழு நாட்களுக்குள் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்தே எதுவும் அமையும்.

கொழும்பின் சில பகுதிகள் கடுமையான முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன. தனிமைப்படுத்தப்பட்ட 13 வீட்டுத் திட்டங்களில், 10 வீடமைப்புத் திட்டங்கள் இந்த வாரம் பூட்டப்பட்ட இடத்திலிருந்து நீக்



கப்பட்டன.

அளுத்கம பிரதேச மக்கள் உரியமுறையில் நடந்து கொள்ளவில்லை. இதன் காரணமாக மற்றுமொரு கிராமத்துக்கும் பரவல் ஏற்பட்டுள்ளது என்றும் இராணுவத்தளபதி குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# கொரோனாவை ஒழிக்க மக்கள் ஒத்துழைப்பு தேவை

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தொற்றை நாட்டிலிருந்து நிரந்தரமாக ஒழிப்பதற்கு மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, கொவிட்-19 வைரஸ் பரவல் காரணமாக கொழும்பு வடக்கு மற்றும் மத்திய கொழும்பு பகுதியில் ஒன்பது பொலிஸ் பிரிவுகளும் , நாடளாவிய ரீதியில் 24 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த பகுதிகளில் வசித்து வரும் மக்கள் தொடர்ந்தும் சுகாதார பிரிவினரின் ஆலோசனைக்கமைய செயற்படுவதுடன், தேவையின்றி வீட்டை விட்டு வெளியேறுவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# எப்போதும் நான் தமிழ் மக்களை நேசிப்பவன்

## சரத் பொன்சேகா

(கொழும்பு)

"மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வைப் பகிரங்கமாக நடத்த அனுமதிக்க முடியாது என நான் வலியுறுத்திய காரணத்தால் என்னைத் தமிழ் மக்களுக்கு எதிரானவனாக வெளிக்காட்ட அரசியல்வாதிகள் சிலர் முயன்றுள்ளார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அண்மையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு தெரிவித்தார்.

நான் ஒருபோதும் தமிழ் மக்களுக்கு எதிரானவன் அல்லன். இன்றும் தமிழ் மக்களை நான் நேசிக்கின்றேன். அரசியல் தீர்வே அவர்களின் கனவாக இருக்கின்றது. எனவே, முழு நாடும்ஏற்கும்ஒரு தீர்வு உடனடியாகக் காணப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உன்னதமான தலைவர். அவருக்கு நிகர் அவர் தான். அதேவேளை, அவர் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகளும் மிகவும் பலம் பொருந்தியவர்கள். அவர்களின் வீரத்தையும், தியாகத்தையும் நான் கொச்சைப்படுத்தமாட்டேன்.

ஆனால், நாட்டின் சட்டத்தை மீறி அவர்கள் செய்த மோசமான பயங்கரவாத நடவடிக்கைகளை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன். அதனால் தான் அவர்களைப் பகிரங்கமாக நினைவுகூரும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுக்கு எதிராக பாராளுமன்றில் நான் உரையாற்றினேன்.

ஆயுதப் போராட்டத்தால் தமிழ் மக்கள் அனுபவித்த அவலங்களை நேரில் கண்ட



றிந்தவன் நான். போர் முடிவுக்கு வந்திராவிட்டால் அவர்களின் அவலங்கள் தொடர்ந்திருக்கும். மீண்டுமொரு போரை தமிழ் மக்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள்.

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நான் போட்டியிட்டபோது வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எனக்குத் தந்த அமோக ஆதரவை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# பதில் அதிபர்களை அதிபர்களாக நியமிக்க விரைவில் நடவடிக்கை - கெஹலிய

(கொழும்பு)

பதில் அதிபர்களாக செயற்படுபவர்களில் தகுதியானவர்களுக்கு அதிபர் நியமனம் வழங்க அமைச்சரவை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

58 வயதுக்குட்பட்ட பதில் அதிபர்களுக்கு புள்ளி வழங்கி தகுதியானவர்களை விரைவில் தெரிவு செய்ய இருப்பதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த அவர், அதிபர்களை நிரந்தரமாக்குவது குறித்து தீவிரமாக ஆராய்வதாக தெரிவித்தார்.

பல வருடங்களாக கஷ்டமான காலப்பகுதியில் பொறுப்பை ஏற்று செயற்பட்டு பாடசாலைகளை முன்னேற்றிய பதில் அதிபர்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

தகைமை இருந்தும் பதவி கிடைக்காதவர்கள் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது. சிலர் 10-15 வருடங்களாக பதில் அதிபர்களாக உள்ளனர்.

58 வயது வரையானவர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க அவகாசம் வழங்கவும் அவர்களுக்கு புள்ளி வழங்கவும் முடிவு செய்யப்பட்டது. விரைவில் தகுதியானவர்களுக்கு நியமனம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

அநீதி ஏற்படாத வகையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அமைச்சரவைக்கு விளக்கமளித்திருந்தார். (நி-4)

# தேங்காயின் விலை ஏற்றத்தினைத் தடுக்க வேண்டுமாயின்

# தென்னைகளுக்கு உரமிட்டு விளைச்சலைக் கூட்டுவது காலத்தின் தேவையாகும்

## உரமிடல் சம்பந்தமான தொழில்நுட்ப ஆலோசனைகள் கீழே தரப்பட்டுள்ளன


(நேற்றைய தொடர்ச்சி....)

**குறிப்பு:**

- 6 அடி சுற்று வட்டப்பரப்பின் முடிவில் வரம்பு கட்டல் அவசியம்.
- டொலமைற்றினை தனியாகப் போடவும்
- மண் ஈரமாக உள்ள போது மட்டும் **APM** உரமிடவும்.

### பத்திரக்கலவையிடல்

உரப்பாவனையின் பின் உர வட்டம் முழுவதையும் காய்ந்த ஓலைகள், உரிமட்டைகள் மற்றும் காய்ந்த புல் போன்றவற்றினால் பத்திரக் கலவையிடுதல் வேண்டும். இதனால் யூரியாவிலிருந்து வரும் அமோனியா வாயுவினால் களை வளர்ச்சி தடுக்கப்படுவதுடன் மண்ணின் ஈரலிப்புத்தன்மையையும் பாதுகாக்க முடிகின்றது. அத்துடன் மண்ணின் உஷ்ணம் குறைக்கப்படுவதுடன் மண்ணின் மேற்பரப்பு காய்ந்து செல்வதைத் தடுக்க முடிவதுடன் சேதனைப் பசளைப் பொருட்களையும் கூட்டுகின்றது. பத்திரக் கலவையிடுதலை உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படாவிட்டால் பாவிக்கப்பட்ட உரத்தின் முழுப் பிரயோசனத்தையும் பெற முடியாது. மண்ணின் நீரோட்டம் நடைபெறும் சரிவான தென்னந் தோட்டங்களுக்கு அரை வட்டமான 10 சென்ரிமீற்றர் ஆழமான சால் அமைத்து அதனுள் உரம் இட்டு மண்ணினால் மூடி பத்திரக் கலவையிடுதல் வேண்டும்.



உரம் பாவிக்கும் கால இடைவெளி

### இளம் கன்றுகளுக்கு

வருடத்திற்கு இரண்டு முறை (6 மாதங்களுக்கு ஒரு தடவை) உரம் இடுதல் சிபாரிசு செய்யப்படுகின்றது. மணல் பங்கான இடங்களில் உரம் கரைந்து செல்வதை குறைப்பதற்காக பல பகுதிகளாக பிரித்தும் உபயோகிக்கலாம்.

### காய்க்கும் மரங்கள்

உரம் வருடாவருடம் பாவிக்கப்படவேண்டும். மணல் பாங்கான இடங்களிலும் மற்றும் இரண்டு போக மழை வீழ்ச்சி உடைய பிரதேசங்களிலும், உரம் கரைந்து வடிந்து வெளிச் செல்வதைக் குறைப்பதற்காக இரண்டு போகங்களிலும்,சிபாரிசு செய்யப்பட்ட உரத்தின் அளவைப் பிரித்து பிரித்துப் பாவிக்கலாம் .

### வேறுபட்ட உரச் சிபார்சு (DFR)

தென்னை மரங்களின் போசணைப் பொருட்களின் சமநிலைக் குறைபாடுகளைக் கண்டறிவதற்கு, தென்னோலையின் பகுப்பாய்வு ஒரு முறையாகும்.இதன் மூலம் போசணைப் பொருட்களின் குறைபாடுகளை நீக்குவதற்கு சிபாரிசுகள் வழங்கப்படுவதுடன், தேவைக்கு அதிகமான போசணைப் பொருட்கள் வழங்குவதையும் கட்டுப்படுத்த முடிகின்றது. மேலும் இந்த வழிமுறையைப் பாவிப்பதன் மூலம் மிகவும் பொருத்தமான அளவு உரத்தை தீர்மானிக்க முடிவதுடன், மேலதிக உரப்பாவனையையும் தவிர்க்க முடியும்.


உரம் பாவித்து குறைந்த பட்சம் 6 மாதம் சென்ற பின்பே இந்தப் பகுப்பாய்வு முறை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். மேலும் மழைக்காலங்களிலும் மற்றும் உரம் பாவித்து 6 மாத காலத்திற்குள்ளும் தென்னோலைகளின் மாதிரித் துண்டுகள் சோதனைக்காக எடுக்கப்படுவதில்லை. மிகவும் பொருத்தமான காலம் தை, மாசி, ஆனி, ஆடி மற்றும் ஆவணி மாதங்களாகும்.

தென்னந்தோட்டக்காரர்கள் தென்னை ஆராய்ச்சி சபையின் தாவரப் போசணைப் பிரிவுடன் தொடர்பு கொள்வதன் மூலம் மேற்படி சேவையினைப் பெற்றுக் கொள்ளலாம்.



### தென்னைக்கான உரப்பாவனையும் நீர்ப்பாசனமும்

தென்னை மரங்களுக்கு நீர்பாய்ச்சும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தால் சிபாரிசு செய்யப்பட்ட உரத்தின் அளவைப் பகுதிகளாக பிரித்து நீருடன் வழங்க முடியும். நீரில் கரையும் உரங்களான யூரியா, மியூரியேற் ஒப் பொட்டாசு ஆகியவை நீருடனும் ஏனைய நீரில் கரையாத உரங்களான எப்பாவல பாறைப் பொஸ்பேற், இறக்குமதி செய்யப்பட்ட பாறை பொஸ்பேற் மற்றும் டொலமைற் ஆகியவற்றை வேறாகவும் உரவட்டத்திற்குள்ளும் பாவித்தல் வேண்டும்.



நன்மைகள்:- **DFR** - பல்வேறுபட்ட உரச் சிபார்சு.

- தேவையான அளவு கனிப்பொருள் மட்டும் பாவிக்கப்படும்.
- சில நேரங்களில் தேவையற்ற உரப்பிரயோகம் செய்தலினைத் தவிர்க்கலாம்.
- கனிப்பொருள் மட்டத்தினை ஒழுங்கான முறையில் பேண உதவும்.



ஆக்கம்:- ஜெ.சத்தியேந்திரன்
உதவிப் பிராந்திய முகாமையாளர்,
தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை,
பிராந்தியக் காரியாலயம், பளை,
கமநல சேவை நிலையம், நல்லூர்.



### தென்னையில் இளங்காய்கள் உதிர்தலை தடுப்பது எப்படி?

தென்மேற்கு பருவகாலங்களில் பைடோப் தோரா பாமிவோரா பூஷணம். இளங்காய்கள் உதிர்வதற்குக் காரணமாகிறது.

**அறிகுறிகள்:**

- காய்களின் மேல், அடிப்பகுதியில் வண்ணம் மாறுதல் (பழுப்பு) மற்றும் காய்களின் அரைப்பகுதி வரை பரவியிருத்தல்.
- காய்களின் உட்திசுக்கள் மிக மிருதுவாக இருத்தல்.
- அழுகிய பருப்புகளிலிருந்து துர்நாற்றம் வீசும்.
- பொதுவாக காய் உதிர்வு ஜனவரி - பெப்ரவரி, ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் ஏற்படுகிறது.
- சாறு உறிஞ்சும் பூச்சி வகைகள், எறும்புகள், பறவைகள் மற்றும் எலிகள் போன்ற இதர காரணங்களாலும் காய் உதிர்வு ஏற்படுகிறது.
- மைற்றினால் ஏற்படுகின்ற தாக்கம்.

### காய் உதிர்வினைக் கட்டுப்படுத்தல்:

- ஒரு சதபோடோ கலவையை பருவமழைக்கு முன்னும் பின்னும் தெளிக்க வேண்டும்.
- மரத்தின் வட்டுப்பகுதியினை சுத்தம் செய்தல், உதிர்ந்த காய்களை எரித்தல், சிபார்சு செய்யப்பட்ட பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்துதல், பாராக்குவாட் களைக்கொல்லியை மர அடிப்பகுதியிலிருந்து 2 (அடி தள்ளி விசிறி களைகளைக் கட்டுப்படுத்தலாம்.
- எறும்பு புற்றுகளைக் கட்டப்படுத்த 'அற்மேயர்' பூச்சிநாசினியை சிபார்சு செய்யப்பட்ட அளவில் தண்டின் அடிப்பகுதியில் தெளிக்கலாம்.

**குறிப்பு:-** தற்சமயம் மழை காலமாகையாலும் நிலத்தில் ஈரம் இருப்பதனாலும் இளம், முதிர் தென்னைகளுக்கு உரமிட சிறந்த காலமாகும்.

மேலதிக விபரங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் உங்கள் பகுதி தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரிடமோ அல்லது உதவிப்பிராந்திய முகாமையாளர், பிராந்திய முகாமையாளருடன் தொடர்பு கொள்ளலாம்.

(முற்றும்.)

# சட்டத்துறைக்கு 20 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு - நீதி அமைச்சர்



(கொழும்பு)

சட்டத்துறைக்கு இம்முறை வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் சுமார் 20 பில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

மதுகமவில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நீதிமன்ற கட்டடத்தொகுதி குறித்த கள விஜயத்தின் போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

மக்களுக்கு இலகுவாகவும் குறுகிய காலத்திற்குள் தமது நீதிமன்ற நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதும் தற்போதைய அரசாங்கத்தின் நோக்கம் என்றும் அவர் கூறினார்.

இதற்காக ஜனாதிபதியினதும் பிரதமரினதும் வழிகாட்டலின் கீழ் பௌதீக மற்றும் மனிதவள அபிவிருத்திக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

குறுகிய காலத்திற்குள் அரச பகுப்பாய்வு அறிக்கையை வழங்குவதற்கு தேவையான பௌதீக வளமும் மனித வளமும் மேம்படுத்தப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

அத்தோடு அபராத முறையையும் மறுசீரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அலி சப்ரி குறிப்பிட்டார். (நி-4)

# ஆயிரம் ரூபாய் விவகாரம்; இம்முறையும் ஏமாற்ற வேண்டாம்

(ஹற்றன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஜனவரி மாதம் முதல் கட்டாயம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இம்முறையும்தோட்டத்தொழிலாளர்களை ஏமாற்றினால் ஜனவரி முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவதற்கு தோட்டத் தொழிலாளர்கள் தயாராகவே இருக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

ஹற்றனில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், "இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெரும் பங்களிப்பை செய்தனர். இன்றும் செய்து வருகின்றனர்.

ஆனால் அவர்களின் வாழ்க்கை நிலைமை மேம்படவில்லை. சுகாதார வசதிகள் இல்லை. தமது பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவதற்கு உரிய வகையிலான கல்வி கட்டமைப்பு இல்லை.

தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி உரிமை வழங்கப்படும் என அரசாங்கங்கள் உறுதிமொழி வழங்கியிருந்தாலும் இன்னும் அது வழங்கப்படவில்லை. சட்டபூர்வமான பத்திரத்துக்கு பதிலாக மாற்று பத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

2021 ஜனவரி முதல் ஆயிரம் ரூபாய் பெற்றுக்கொடுக்கப்படும் என அரசாங்கம் வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழிந்துள்ளது.

ஆனால் தோட்ட நிறுவனங்கள் இணங்கினால்தான் இந்த சம்பள உயர்வு கிடைக்கும். அவ்வாறு இணங்காவிட்டால் கிடைக்காது.

நிறுவனங்கள் இணங்காவிட்டாலும் அந்த தொகையை அரசாங்கம் வழங்குவதற்கான நிதி வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படவில்லை.

நிறுவனங்கள் சுவீகரிக்கப்படும் எனக் கூறப்பட்டாலும் அதற்கான சட்ட ஏற்பாடுகளும் இடம்பெறவில்லை. எது எப்படியிருந்தாலும் இம்முறை தோட்டத் தொழிலாளர்கள் ஏமாற்றப்படும் பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கைக்கு அவர்கள் தயாராகவே இருக்கின்றனர்" என அவர் மேலும் தெரிவித்தார். (நி)



மாதிவெல-மேற்கு நகர விவசாய மற்றும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவினால் நேற்று முன்தினம் பிற்பகல் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

# மகர கைதிகளின் உடலை தகனம் செய்ய நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

மகர சிறை மோதலில் உயிரிழந்த நான்கு பேரின் சடலத்தை தகனம் செய்யவத்தளை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மகர சிறை மோதலில் உயிரிழந்த 11 பேரின் பிரேத பரிசோதனைக்காக நியமிக் கப்பட்ட நிபுணர் குழுவினால் தயாரிக்கப்பட்ட விசேட அறிக்கை நேற்று மகர நீதவான் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் நான்கு பேரின் பூத வுடல்களை அடக்கம் செய்ய இடமளிப்பதா? இல்லையா? என்பது தொடர்பான தீர்ப்பு நேற்று வழங்கப்பட்டுள்ளது.

இந்த மோதல் காரணமாக 11 கைதிகள் உயிரிழந்த நிலையில் அவர்களில் 8 பேருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்து.

அதன்படி, குறித்த நான்கு பேரும் துப்பாக்கிப் பிரயோகம் காரணமாகவே உயிரிழந்துள்ளதாக குறித்த பிரேதபரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த சடலங்களை தகனம் செய்யாமல் அடக்கம் செய்ய அனுமதி வழங்கு மாறு உயிரிழந்த நபர்களின் உறவினர்கள் மற்றும் சட்டத் தரணிகள் நீதிமன்றில் கோரி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கிழக்கு முனையம் மாத்திரமல்ல திருமலை எண்ணெய் தாங்கிகளையும் இந்தியாவிற்கு வழங்கவே அரசு முயற்சி

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்தியாவின் நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையானது இத்துடன் நிறைவடையப்போவதில்லை. மாறாக திரு கோணமலை எண்ணெய் தாங்கிகள் உள்ளிட்ட ஏனைய தேசிய சொத்துக்களும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி தலைமையகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தனியார்மயப்படுத்த அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. கடனை செலுத்த மீளக்கடன் பெறும் நிலைமையே தற்போது நாட்டில் காணப்படுகிறது. இந்நிலையில் வெளிநாடுகளால் பலவந்தமாக தேசிய சொத்துக்களை விற்கவைப்பதற்கான அழுத்தங்கள் பிர யோகிக்கப்படுகின்றன.

இவ்வாறு தேசிய சொத்துக்கள் விற்கப்படுவதில் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் என்பனவே பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும்.

ஆட்சியை கைப்பற்றுவதற்கு முன்னர் தேசிய சொத்துக்களை விற்கப் போவதில்லை என்று உறுதியளித்த அரசாங்கம் அதற்கேற்ப செயற்படாமல் மக்களின் கோரிக்கைக்கு முரணாகவே செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

கடந்த ஒக்டோபர் 22 ஆம் திகதி இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்துள்ள அமைச்சர் றோஹித அபேகுணவர்தன, கடனை மீளச் செலுத்த முடியாத நிலையில் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அறிவித்தலொன்றையும் விடுத்துள்ளார்.

இந்தியாவின் "அதானி" என்ற நிறுவனத்திற்கு கிழக்கு முனையத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டே இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசாங்கத்திற்கு இதனை வழங்கினால் அது பொருத்தமானதாகும். எனினும் குறித்த நிறுவனத் திற்கு வழங்குவது எவ்வாறு பொருத்தமாகும். இந்த நடவடிக்கை இத்துடன் நிறைவடையப் போவதில்லை. திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் உள்ளிட்ட ஏனைய சொத்துக்கள் வரை பாதிப்பை ஏற்படுத்தும். இவ்வாறான செயற் பாடுகளுக்கு எதிராக நாம் நிச்சயம் போராடுவோம். நாட்டு மக்களையும் எம்முடன் கைகோர்க்குமாறு அழைப்பு விடுக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# மின்சாரத்தை உற்பத்தி செய்ய ஜனாதிபதியின் புதிய திட்டம்

(கொழும்பு)

தேசிய மின் கட்டமைப்பில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை இணைத்துக் கொள்வது குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளார். மின் உற்பத்தி தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதனை தெரிவித்துள்ளார்.

காற்றாலை சூரிய சக்தி மற்றும் இயற்கை எரிவாயு ஆகியவற்றின் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்து அதனை படிப்படியாக தேசிய மின் கட்டமைப்பில் இணைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு அவர் தெரிவித்தார்.

குறுகியகால இலக்குகளுடன் முறையான திட்டங்களுடன் புதிப்பிக்கத்தக்க ஆற்றல் மின் உற்பத்தியை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார். (நி-4)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சீனியன் சிவமூர்த்தி**

[பிரதேசசபை உத்தியோகத்தர்]

தோற்றம் 15.03.1962

மறைவு 01.01.2017

ஆண்டுகள் நான்கு கடந்தும்
தாளாத்துயரில் தவிக்கின்றோம் நாம்
எமை ஆற்றிட ஆளில்லை அப்பா
எங்களுடன் நீங்கள் இல்லையே
எண்ணிட மனம் மறுக்கிறது அப்பா
கோடி வருடங்கள் ஓடி மறையும்
உங்கள் நினைவுகள் மட்டும்
நீங்காது வாழும்

பிராமணன் தோட்டம்,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்.

# சட்டவிரோத செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்

## நகர சபை உறுப்பினர்

(சாவகச்சேரி)


சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறுகின்ற தொடர் களவு உள்ளிட்ட சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க சாவகச்சேரி நகரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் சு.நிதிகேசன் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மீசாலை, கற்குழி, கல்வயல் மற்றும் மண்டுவில் உள்ளிட்ட பகுதிகளில் பல வீடுகளில் தொடர்ச்சியாக களவு இடம்பெற்றுள்ளது. இதன் போது நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டார் சைக்கிள், நகைகள் உள்ளிட்ட பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன. தெரு விளக்குகள் சீரின்மையே இவ்வாறான தொடர் களவு மற்றும் சட்ட விரோதச் செயற்பாடுகளுக்கு காரணமாக அமைகிறது.

பொதுமக்களை பாதுகாக்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதனை முன்னெடுக்க வேண்டியது நகர சபையின் கடமை. இவ்வாறான களவு உள்ளிட்ட சட்ட விரோதச் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.(5)

# மரக்கறி வியாபாரிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச்சந்தை மரக்கறி வியாபாரிகளுக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

மருதனார்மட சந்தைப் பகுதியில் கொரோனா தொற்றாளர் இனங்காணப்பட்டுள்ள நிலையில் குடாநாட்டு சந்தை வியா பாரிகளுக்கு பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் சாவகச்சேரி மரக்கறிச் சந்தை வியாபாரி கள் 50 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)



சௌபாக்கியா வீட்டுத்திட்ட திட்டத்தின் கீழ் சாவகச்சேரி-மட்டுவில் வடக்கு பகுதியில் தெரிவு செய்யப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு வீட்டிற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வீட்டிற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்தார். (படம்- சுபேசன்)

# ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு வருடாந்த விடுமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனமானது வருடாந்த விடுமுறைக்காக எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை முதல் 31 ஆம் திகதி வியாழக்கிழமை வரை மூடப்பட்டிருக்கும் என்பதை அரச திணைக்களங்கள், மாகாண சமூகசேவைகள் திணைக்களங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் நிறுவனப் பயனாளிகளின் கவனத்திற்காக அறியத் தரப்பட்டுள்ளதுடன் வருடாந்த விடுமுறை முடிவுற்று எதிர்வரும் 01.01.2021 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் செயற்பாடுகள் வழமை போன்று இடம் பெறும் எனவும் யாழ். ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் வைத்தியர். திருமதி. ஜெ. கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (5)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த கார் மதிலுடன் மோதி விபத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -கனகம்புளிச் சந்திப் பகுதிக்கு அருகாமையில் நேற்று புதன் கிழமை காலை கார் ஒன்று மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியது. கனகம்புளியடிச் சந்திப் பகுதியில் அச்சுவேலிப் பகுதி நோக்கிச் சென்ற கார் ஒன்றே இவ்வாறு வேகக்கட்டுப்பாட்டினை இழந்து மதிலுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் காரின் முன்பகுதி சேதமடைந்துள்ளது. சாரதியும் சிறு காயங்களுக்குள்ளானார். (5)





சங்கானை குமரக்கோட்டம் சனசமூக நிலையத்தால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வேலணை, கல்லுண்டாய் மற்றும் நந்தாவில் பகுதிகளைச் சேர்ந்த 200 குடும்பங்களுக்கு உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது. (படம்: விஜயகாந்த்)

# பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(நல்லூர்)

நல்லூர் கைலாசப்பிள்ளையார் இந்து இளைஞர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணியளவில் கைலாசபிள்ளையார் பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டில் ஏற் பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறவில்லை.

எனவே சனிக்கிழமை நடைபெறவுள்ள கூட்டத்தில் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதுடன் புதிய நிர்வாகத் தெரிவும் நடைபெறவுள்ளது என செயலாளர் அறிவித்துள்ளார். (5-4-33)

# பிற்போடப்பட்ட பரீட்சைகள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் கடந்த 5 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டு சீரற்ற காலநிலை காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவியினருக்கான Iம், IIம் திணைக்கள பரீட்சைகளிற்கான திணைக்கள ஒழுங்குவிதிகள் எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பரீட்சைக்கு விண்ணப்பித்த தகைமையுடைய பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் "செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" என்னும் முகவரியுடன் அல்லது 021-221 9939 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் உடனடியாக தொடர்பு கொள்ளுமாறும் பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் இருந்தால் மட்டுமே பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் எனவும் வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் சி. திருவாகரன் அறிவித்துள்ளார். (5)



மரநடுகை மாதத்தினை முன்னிட்டு கோண்டாவில் புகையிரத நிலைய வீதி ஞானவீர சனசமூக நிலையத்தால் அண்மையில் வீதியோரத்தில் மரங்கள் நாட்டப்பட்டன.

## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

தலைமைக் காரியாலயக் கட்டடம் அமைப்பதற்காக பின்வரும் மூலப்பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக தகுதியானவர்களிடம் இருந்து கூறுவிலை கோரப்படுகின்றது.

- கருங்கல் - (6"---9') Cub
- கண்டாவளை மணல் - Cub
- கருங்கல் சல்லி - $\left\{\frac{3''}{4}, \frac{5'}{8}\right\}$ Cub
- கிரவல் - Cub

மேற்படி பொருட்கள் பகுதி பகுதியாகக் கொள்வனவு செய்யப்படும்.

கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 24.12.2020 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (C-921)

**தலைவர், வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி, பிப்பிலிச்சந்தி, மானிப்பாய்.**

## வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி

நவாலி தெற்கில் அமைந்துள்ள எமது கொத்தணிக்குச் சொந்தமான வடிசாலை வளவில் பின்வரும் வேலைகள் செய்வதற்கு கூலிக்கான கூறுவிலை கோரப்படுகின்றது. கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு ஒவ்வொரு வேலைகளுக்கும் ரூபா.1000/= வீதம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. காரியாலய மண்டபக் கட்டடம் (33'x11')
2. குளியலறை மலசலகூடம் அமைத்தல்.
3. அறை திருத்தம் செய்தல்.
4. களஞ்சிய அறை லெவல்சீற் அடித்தல்.

- விண்ணப்பப் படிவம் வழங்கும் திகதி :- 26.12.2020 சனிக்கிழமை மு.ப.10.30 மணிவரை
- விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளல் :- 29.12.2020 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிவரை
- விண்ணப்பம் திறத்தல் :- 29.12.2020 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணி

கூறுவிலை தொடர்பில் நெறியாளர்குழுவின் தீர்ப்பே இறுதியானதாகும். (C-922)

**தலைவர், வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணி, பிப்பிலிச்சந்தி, மானிப்பாய்.**

## வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

### சந்தை, இறைச்சிக்கடைக்கான 01.01.2021 - 31.12.2021 வரையுள்ள காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான இரண்டாவது மீள் கேள்வி அறிவித்தல் - 2021

1. கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி :- 23.12.2020 ஆம் திகதி 3.00 மணி வரை
2. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :- 24.12.2020 காலை 10.30 மணி வரை
3. கேள்விகள் திறக்கப்படும் திகதி :- 24.12.2020 காலை 10.30 மணிக்கு.
   வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச நிர்வாக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் 27.10.2020 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.
4. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
5. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
6. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| தொ.இல | குத்தகை விபரம் | 2021 ஆம் ஆண்டு ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம். | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் (வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 51,100.00 | 600.00 | 500.00 | 100.00 |
| 2 | நெல்லியடி மீன் சந்தை | 713,300.00 | 7,500.00 | 500.00 | - |

**க.த.ஐங்கரன்,**
**தவிசாளர்,**
**வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.**

(C-924)

## கிருஷ்ணா அடகு சேவை

பதிவு இல.:-J/DS/BR/472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2020 ஆம் ஆண்டு 28.02.2020 இற்கு முன்னர் அடகு நகைகள் யாவற்றையும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி (15.01.2021) இற்கு முன்னர் மீட்கவும்.

மீட்கமுடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தை கட்டிப்புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.01.2021 ஆம் திகதியன்று ஏலத்தில் விற்கப்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

குறிப்பு:- 2019 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் முதலாம் திகதி முதல் 2020 ஆம் ஆண்டு 2 ஆம் மாதம் 28 ஆம் திகதிக்கு இடைப்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும். (C-925)

**இல.370, கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 490 0311**

**உரிமையாளர்,**
**இல.09, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 5046**

## வழங்குநரைப் பதிவு செய்தல் கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி - 2021

**பொருட்கள்**

1. காகிதாதி எழுது பொருட்கள்
2. அலுவலக உபகரணங்கள் (தளபாடம்)
3. சித்த மருத்துவ மருந்துகள்
4. நூலக நூல்கள்
5. துணி வகை
6. கட்டடப்பொருட்கள்
7. கல், மணல்
8. தீந்தை வகை
9. நீர்க்குழாய்
10. வாகன உதிரிப்பாகங்கள்
11. மின் வழங்கு பொருட்கள், மின் பாவனைப்பொருட்கள்
12. எரிபொருட்கள், உராய்வு நீக்கி
13. இரும்புப் பொருட்கள்
14. தீராந்திகள், பலகைகள், சட்டங்கள்
15. பனைமரங்கள், சலாகைகள்
16. வாகனங்களுக்கான ரயர் ,ரியூப் மற்றும் மின்கலம்
17. கணினி, அச்சுப்பொறி, பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல், நச்சு நிரல் எதிர்ப்பான், செருகி மற்றும் இவற்றிற்கான உதிரிப்பாகம்
18. சுத்திகரிப்புப் பொருட்கள் மற்றும் கிருமி நாசினிகள்
19. பாதணிகள், தோல் பொருட்கள், மழை அங்கிகள்
20. அலங்காரப் பொருட்கள்
21. இலத்திரனியல் பொருட்கள்
22. மரக்கன்றுகள் (பழமரம், நிழல் தருமரங்கள், பூக்கன்றுகள் முதலியன)
23. சிற்றுண்டி மற்றும் உணவு வகைகள்
24. கழிவகற்றும் கூடைகள்

**சேவைகள்**

1. அச்சிடுதல், பதாகைகள் அமைத்தல், ஸ்ரிக்கர் அச்சிடுதல், நூல் கட்டுதல்
2. மோட்டார் வாகனங்கள், உழவு இயந்திரங்கள் திருத்துதல்
3. வாகனங்களுக்கு ரியூப் ஒட்டுதல், ரயர் மாற்றுதல்
4. ஒட்டுவேலைகள், உலோக வேலைகள்
5. கனரக வாகனங்களின் சேவை, வாடகைக்கு விடுதல்
6. மின்சாரத்திருத்தம்
7. இலத்திரனியல் சாதனத்திருத்தம்
8. வாகன சுத்திகரிப்பு
9. கோலவுடை தைத்தல்
10. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு
11. இறப்பர் முத்திரை தயாரித்தல்
12. வீதி விளக்குகள் பொருத்துதல்
13. மயானங்களில் இறந்த உடல்களை எரியூட்டுதல்
14. வீதி,கட்டடம் புனரமைப்பு, நிர்மாண வேலைகள்
15. கழிவகற்றல் சேவை (Gully emptier Service)
16. குழாய்க்கிணறு அமைத்தல்

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1,000 (வரிகள் நீங்கலாக)

விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2021"** எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் **"தவிசாளர், தலைமை அலுவலகம், கரைச்சிப் பிரதேச சபை, கிளிநொச்சி"** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் **2020.12.28** வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களிற்கு **021 228 5761** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**தவிசாளர்,**
**கரைச்சி பிரதேச சபை,**
**கிளிநொச்சி.**

(C-923)

# 'தாலம்' ஓலை நூல்-3 வெளியீடு



(நெளுக்குளம்)
வவுனியா மாவட்ட பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் "தாலம்" ஓலை-3 வெளியீட்டு விழா வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கூட்டுறவு சங்கத்தின் மாவட்ட தலைவர் ம.கலிஸ்ரஸ் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் சமன்பந்துலசேன, கூட்டுறவு உதவி ஆணையாளர் இந்திரா சுபசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-299)

# கைக்குண்டு மீட்பு

(தருமபுரம்)
கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரிய குளம் பகுதியில் வயல் காணியின் ஒன்றில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக இராணுவத்தினர் கிளிநொச்சி பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் கிளிநொச்சி நீதிமன்றின் அனுமதியுடன் கைக்குண்டை செயலிழக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (5-4-316)

# புதிய தவிசாளராக ஜெகதீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டார்

(நெளுக்குளம்)
வவுனியா வெண்கல செட்டிகுளம் பிரதேச சபையின் புதிய தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சு.ஜெகதீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

செட்டிகுளம் பிரதேச சபையின் வரவு-செலவுத் திட்டம் இரண்டு தடவைகள் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு இரண்டு தடவையும் தோல்வியடைந்தது.

அந்த வகையில் புதிய தவிசாளருக்கான வாக்கெடுப்பு வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக்டிறெஞ்சன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சு.ஜெகதீஸ்வரனும் சுதந்திரக் கட்சி சார்பில் ஏற்கனவே தவிசாளராக பதவி வகித்த ஆ.அந்தோணியின் பெயரும் முன்மொழியப்பட்டது. தெரிவிற்கான வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சு.ஜெகதீஸ்வரன் 10 வாக்குகளைப் பெற்று தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். (5-4-299)

# ஜனாதிபதியிடம் கோரிக்கை வைத்தார் பாராளுமன்ற உறுப்பினர் திலீபன்

(நெளுக்குளம்)
வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் ஜனாதிபதியிடம் வன்னி மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளை நேரடியாகத் தெரியப்படுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர்களுடனான சந்திப்பின் போதே அவர் இதனை முன்வைத்துள்ளார்.

இதன் பிரகாரம் அபிவிருத்தி குழுத்தலைவர்கள் செயற்படுத்தும் வேலைத்திட்டங்களுக்கு அரச அதிகாரிகளும் ஒத்துழைப்பை வழங்க வேண்டுமென வும் இதன்மூலமே மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வர முடியும் எனத் தெரிவித்தார்.

காணி தொடர்பாக மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.

இதனைச் செவிமடுத்த ஜனாதிபதி இவ்வாறான நிலை காணப்படும் பட்சத்தில் அதனை சீர் செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்தார். (5-4-299)

# தோட்டங்களின் வளர்ச்சி நிலையை மேம்படுத்தும் கலந்துரையாடல்

(கண்டாவளை)
முல்லைத்தீவு மாவட்ட செயலக வளாகத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்ற தோட்டங்களின் வளர்ச்சி நிலையினை மென்மேலும் அதிகரிக்கச் செய்தல் மற்றும் பசுமைப்படுத்தும் செயற்றிட்டத்தினை பரவலாக்கச் செய்யும் நோக்கோடு மாவட்ட செயலக உற்பத்தித்திறன் பிரிவினரால் "இயற்கையை நேசிப்போம்: அதனுடன் இணைந்து வாழ்வோம்" எனும் தொனிப்பொருளிலான வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினை மேம்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் உற்பத்தித் திறன் பிரிவின் பிரதம இணைப்பாளர் க.லிங்கேஸ்வரன் தலைமையில் அரசாங்க அதிபர் க.விமலநாதன் பங்கேற்புடன் நேற்று முன்தினம் மாவட்ட செயலக புதிய மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

மாவட்ட செயலக வளாகத்தில் மூலிகை, மரக்கறிகள், பழங்கள், நிழல் தரு மரங்கள் மற்றும் பூந்தோட்டங்கள் என்கின்றவாறு பசுமைப்படுத்தும் செயற்றிட்டத்தை கடந்த நான்கு வருடங்களாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதன் இன்னொரு பரிணாம வளர்ச்சியாக குறித்த துறைசார் அதிகாரிகளினுடைய ஆலோசனை மற்றும் வழிப்படுத்தல்களுடன் மாவட்ட விவசாய பணிப்பாளர் தலைமையில் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் தோட்டங்களை பார்வையிடல், ஆய்வு செய்தல், மேலதிக மாற்றங்களிற்காக ஆலோசனைகள் வழங்கல், பின்னூட்டல்களை அவதானித்தல், இறுதியாக குறித்த பிரிவுகளிற்கு புள்ளிகளை வழங்கி தரப்படுத்தல் என்கின்றவாறு இவ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (5-4-315)

# ஆலய வளாகம் தொற்று நீக்கப்பட்டது

(கண்டாவளை)
கிளிநொச்சி வட்டக்கச்சி கந்தசுவாமி ஆலய வளாகத்தில் நோய் பரவலைத்தடுக்கும் வகையில் சுத்திகரிப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இரணைமடுவில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு பயணிகளை ஏற்றி வந்த பேருந்துகள், லொறிகள் கடந்த 12 ஆம் திகதி திரும்பிச் சென்ற போது அதன் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் வட்டக்கச்சி கந்தசுவாமி ஆலயத்தில் தரித்து பொதுமக்கள் குடிநீர் தேவைக்குப் பயன்படுத்தும் கிணறு மற்றும் மலசலகூடம் என்பவற்றை பயன்படுத் தியுள்ளனர் இதனால் கொரோனாத் தொற்று அச்சம் ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக பிரதேச மக்கள் மற்றும் ஆலய நிர்வாகம் என்பவற்றால் கரைச்சிப் பிரதேச சபைக்குத் தெரியப்படுத்தியபோதும் எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும் அதனையடுத்து உடனடியாக பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் இரணைமடு விமானப்படைத் தளபதி ஆகியவற்றுக்கு தெரியப்படுத்திய தையடுத்து உடனடியாகவே தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (5-4-315)

# காக்கை தீவில் கவனயீர்ப்பு போராட்டம்





(அராலி)
இந்திய இழுவைப் படகுகளினால் கடற்றொழில் உபகரணங்கள் சேதமாக்கப்பட்டமைக்கு எதிராக யாழ்.காக்கைதீவு மீனவர்கள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறுகையில்,

எங்களது தொழில் உபகரணங்கள் பல தடவைகள் இந்திய மீனவர்களின் இழுவைப் படகுகளிற்குள் அகப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டுள்ளன.

அதிலும் தொடர்ச்சியாக கடந்த மூன்று நாட்கள் மட்டும் பல இலட்சம் பெறுமதியான உபகரணங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன. எனவே இவற்றிற்கு சரியான தீர்வு ஒன்று வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர். (5-4-104)

# தோட்டங்களில் மீண்டும் வெள்ளம்



(குப்பிழான்)
குப்பிழான் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு முதல் நேற்று முன்தினம் அதிகாலை வரை பெய்த தொடர் மழை காரணமாக தோட்ட நிலங்கள் பலவும் மீண்டும் வெள்ளக்காடாக மாறியுள்ளன. (5-4-18)

# பி.சி.ஆர்.மாதிரிகள் பெறப்பட்டன

(நல்லூர்)
திருநெல்வேலி பொதுச் சந்தையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வியாபாரிகள் 313 பேரிடம் பி.சி.ஆர். பரிசோதனைக்கான மாதிரிகள் நேற்றுப் பெறப்பட்டன.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடு முழுவதும் எழுமாறாக பி.சி. ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதில் ஒரு அங்கமாகவே நேற்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள திருநெல்வேலி பொதுச்சந்தை வியாபாரிகளின் மாதிரிகள் பெறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-33)

## இராசிபலன்

17.12.2020
மார்கழி 02, வியாழக்கிழமை
திருதியை முன்னிரவு 6.35 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 10.45 மணிவரை
சுபநேரம் 7.52-9.22 மணிவரை
இராகுகாலம் 1.52-3.22 மணிவரை
சந்திராஷ்டமம் மிருகசீரிடம், திருவாதிரை

வளவன்


மேஷம்

செய்தொழில் மேன்மையுண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், கனவு பலிதமுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


ரிஷபம்

மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், அதிகம் செலவாகும் என நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும்.


மிதுனம்

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


கடகம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்கு வரலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும்.


சிம்மம்

இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.


கன்னி

செய்தொழில் வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.


துலாம்

வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும்.


விருச்சிகம்

பாராட்டும் புகழும் கூடும் நாள், தொழில் முன்னேற்றத்திற்கு உறவினர் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


தனுசு

தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம்.


மகரம்

வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், பெரியோரின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பணியில் நீண்ட நேரம் பணிபுரியும் நிலை ஏற்படலாம், போசன சுகமுண்டு.


கும்பம்

சிறிய வேலையொன்றுக்காக சற்று அலைய நேரிடலாம், தொழிலில் சில மாற்றங்கள் செய்வது பற்றி ஆலோசிப்பீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.


மீனம்

அரசு தொடர்பான காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

முற்றிய பிறகு பெற்ற அறிவுரை தந்திடும் வேதனை

# அரசியலமைப்பு உருவாக்கத்தை சர்வதேசம் உன்னிப்பாக அவதானிக்கிறது

(கொழும்பு)

**நாட்டிலுள்ள அனைத்து இன மக்களுக்கும் பொருத்தமான புதிய அரசியலமைப்பை உருவாக்க வேண்டியது தற்போதைய அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும். இது தொடர்பில் சர்வதேசமும் இலங்கையை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கம் புதிய அரசியலமைப்பு பற்றி பல சந்தர்ப்பங்களில் கருத்துக்களை வெளியிட்டுள்ளது. நல்லாட்சி அரசாங்கத்தில் அரசியலமைப்பு தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் அனைத்துக் கட்சி பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய குழு காணப்பட்டது.

இந்த குழு 78 தடவைகள் கூடின. அதன் மூலம் இடைக்கால அறிக்கையும் சமர்பிக்கப்பட்டது. எனினும் அதனை நிறைவேற்றுவதற்கு முன்னர் 2018 ஒக்டோபர் அரசியல் சூழ்ச்சியின் காரணமாக அனைத்து முயற்சிகளும் முறியடிக்கப்பட்டன.

எனினும் தற்போதுள்ள அரசாங்கத்தினால் அனைத்து இன மக்களுக்கும் பொறுத்தமான அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இது தொடர்பில் சர்வதேசமும் அவதானித்துக் கொண்டிருக்கிறது.

எமது அரசாங்கம் மீண்டும் ஆட்சியமைத்திருக்குமானால் எம்மால் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை சட்டமூலமாக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கும்.

எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் உண்மையில் கட்சியை நேசிக்கும் தமிழ் மற்றும் முஸ்லிம் உறுப்பினர் மாத்திரமே கள



மிறக்கப்படுவர்கள்.

இதனை நான் கட்சி தலைமைத்துவத்திடமும் வலியுறுத்தியுள்ளேன்.

காரணம் ஐக்கிய மக்கள் சக்தி மூலம் பாராளுமன்றத்திற்கு தெரிவானவர்கள் அரசாங்கத்திற்கு சார்பாக செயற்படுகின்றமை வெட்கப்பட வேண்டிய விடயமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# இலங்கை முஸ்லிம்களை மாலைதீவிற்கு அழைக்க வேண்டும்

## மாலைதீவு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கை முஸ்லிம்களை தமது நாட்டிற்கு வருமாறு மாலைதீவு அரசாங்கம் அழைப்பு விடுக்க வேண்டுமென அந்த நாட்டின் முன்னாள் வெளி விவகார அமைச்சர் தன்யா மமூன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களுக்கான இறுதிக் கிரியைகளை இலங்கை ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைவாக மாலைதீவில் நடத்துவது குறித்து ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சோலி ஆராய்ந்து வருவதாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா ஷஹீட் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே மாலைதீவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் தன்யா மமூன் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

மேலும் தெரிவித்துள்ள அவர்,

இலங்கை முஸ்லிம்களை மாலைதீவிற்கு வருமாறு மாலைதீவு அரசாங்கம் அழைப்பு விடுக்காதமை தனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது என தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸினால் உயிரிழந்தவர்களுக்கு தங்களின் மத நம்பிக்கையின் அடிப்படையில் இறுதிச்சடங்கினை நடத்துவதற்கான சிறுபான்மை முஸ்லிம்களின் உரிமைகளை இலங்கை அரசாங்கம் மதிக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை கொரோனா வைரஸினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை மாலைதீவில் அடக்கம் செய்வதற்கான அனுமதி அந்த நாட்டிடம் கோரப்பட்டமை குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு எதுவும் தெரியாது என ஊடக பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# சட்டமா அதிபரின் செய்தித் தொடர்பாளர் இன்று ஆணைக்குழுவில் ஆஜர்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதிவிசாரணை ஆணைக்குழு, சட்ட மா அதிபரின் செய்தித் தொடர்பாளர் சிரேஷ்ட அரச சட்டவாதி நிஷாரா ஜயரத்னவை ஆணைக்குழு முன்னிலையில் ஆஜராக அறிவித்தல் அனுப்பியுள்ளது. இன்று 17 ஆம் திகதி சாட்சியம் அளிக்க ஆஜராகுமாறு ஆணைக்குழுவின் செயலர் ஊடாக இந்த அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அசாத் நவவி சாட்சியம் அளிக்கும் போது அவரது சட்டத்தரணியான ஜனாதிபதி சட்டத்தரணி சவேந்திர பெர்னாண்டோ முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்து இந்த அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி)

# முதியோர் இல்லத்தில் தீப்பரவல் 11 பேர் உடல் கருகிப் பலி

(மொஸ்கோ)

ரஷ்யாவில் முதியோர் இல்லத்தில் இடம்பெற்ற தீ விபத்தில் வயது முதிர்ந்த 11 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர்.

பாஷ்கோர்டோஸ்தான் பிராந்தியம் இஸ்புல்டினோ கிராமத்தில் உள்ள மரக் கட்டடத்தில் முதியோர் இல்லம் உள்ளது.


கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு 12.53 மணிக்கு திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், தீப்பரவலை அதிகாலை 4 மணிக்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் வரை மூன்று மணி நேரத்திற்கும் மேலாக நீடித்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



குறித்த தீவிபத்தில், எழுந்து நடக்க முடியாத நிலையிலிருந்த 11 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# இந்திய குடியரசு தின விழாவில் இங்கிலாந்து பிரதமர்



(டில்லி)

எதிர்வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள இந்திய குடியரசு தின விழாவில், இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கவுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று நாட்கள் பயணமாக, டில்லிக்கு விஜயம் செய்துள்ள இங்கிலாந்து வெளியுறவுத்துறை அமைச்சர் டொமினிக் ரொப் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, ஜனவரி மாதம் இந்திய குடியரசு தின விழாவில் இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜோன்சன் பங்கேற்பார் என டொமினிக் ரொப் அறிவித்தார்.

இதேவேளை, குடியரசு தின விழாவில் இங்கிலாந்து பிரதமர் பங்கேற்பது என்பது புதிய சகாப்தத்தின் முக்கிய அடையாளமாகும் என இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கூறியுள்ளார்.(நி-4)

# மக்களின் விருப்பம் வெற்றி பெற்றுள்ளது-ஜோபிடன்

(வோஷிங்டன்)


அரசியலமைப்பு மற்றும் மக்களின் விருப்பம் வெற்றி பெற்றுள்ளது என அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ஜோபிடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கடந்த நவம்பர் 3 ஆம் திகதி நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோபிடன் வெற்றி பெற்று, அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

ஜனாதிபதியினை தெரிவு செய்வதற்கு எலக்டோரல் காலேஜ் எனப்படும் தேர்வாளர் குழுவின் 270 உறுப்பினர்களின் வாக்குகளைப் பெற வேண்டும்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதியினை தெரிவு செய்வதற்கான எலக்டோரல் காலேஜ் எனப்படும் தேர்வாளர்கள் குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் 50 மாகாணங்களில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 538 தேர்வாளர்கள் குழுவினர் வாக்களித்தனர்.

அந்தந்த மாகாணங்களில் தேர்வாளர் குழுவினர், ஜனாதிபதி, துணை ஜனாதிபதியினை



தேர்ந்தெடுத்து வாக்களித்து கையெழுத்திட்டனர். தேர்வாளர் குழுவினர் வாக்களிப்பால் தேர்தல் முடிவுகள் மாற வாய்ப்பில்லை. மேலும் முறைகேடுகள் நடக்கவும் வாய்ப்பில்லை. அமெரிக்காவில் ஜனாதிபதிக்கு இவர்களது அங்கீகாரம் அவசியமானது.

இதன்படி, கலிபோர்னியாவில் 55 எலக்டோரல் கொலேஜ் வாக்குகளை ஜோபிடன் பெற்றார். இதன் காரணமாக 270 தேர்தல் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதி பதவியை கைப்பற்றுவதை ஜோபிடன் மீண்டும் உறுதி செய்துள்ளார். பிடனுக்கு 306 வாக்குகளும் ட்ரம்பிற்கு 232 வாக்குகளும் கிடைத்தன.

ஜோபிடன் ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு இந்த நடைமுறை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்பட்டது. ஏனெனில், ட்ரம்ப் தோல்வியை ஒப்புக்கொள்ள மறுப்பு தெரிவித்து வருகின்றார்.

தனது வெற்றி குறித்து ஜோபிடன் கூறும் போது,

"சட்டத்தின் ஆட்சி, நமது அரசியலமைப்பு மற்றும் மக்களின் விருப்பம் வெற்றி பெற்று உள்ளது என கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறும் போது "ஜனநாயகத்தின் சுடர் இந்த தேசத்தில் வெகு காலத்திற்கு முன்பே எரியத்தொடங்கி விட்டது. ஒரு தொற்றுநோயோ அல்லது அதிகார துஷ்பிரயோகமோ அந்த சுடரை அணைக்க முடியாது" எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# 58 ஆண்டுகளின் பின் வந்த 'ஹிமாலய கிரிபன் கழுகு'

(வேதாரண்யம்)

வேதாரண்யம் தாலுகா கோடியக்கரை பறவைகள் சரணாலயத்திற்கு 58 ஆண்டுகளுக்கு பிறகு இமயமலையில் இருந்து "ஹிமாலய கிரிபன் கழுகு" வந்துள்ளது.

நாகை மாவட்டம் வேதாரண்யம் தாலுகா கோடியக்கரை பறவைகள் சரணாலயத்திற்கு ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை சைபீரியா, ஈரான், ஈராக் நாடுகளில் இருந்து ஆயிரக் கணக்கில் 247 வகையான பறவைகள் வந்து செல்லும். 50 வகையான நிலப்பறவைகளும், 200 இற்கும் மேற்பட்ட நீர்ப்பறவைகளும் ஆண்டுதோறும் சீசன் காலங்களில் வந்து செல்கிறது.

கடந்த 1963ஆம் ஆண்டு இந்த சரணாலயத்திற்கு இமயமலையில் இருந்து "ஹிமாலய கிரிபன் கழுகு" வந்து சென்றது. தற்போது 58 ஆண்டுகளுக்கு பிறகு நேற்று கோடியக்கரைக்கு மீண்டும் "ஹிமாலய கிரிபன் கழுகு" வந்துள்ளது.

இந்தியாவில் மொத்தம் 9 வகையான கழுகுகள் காணப்படுகின்றன. இதில் யூரேசியன் கிரிபன் கழுகு மற்றும் ஹிமாலய கிரிபன் கழுகுகள் உலகில் பழைமைவாய்ந்ததாகவும், அழியும் தறுவாயிலும் உள்ளன. இந்த பழைமை



வாய்ந்த ஹிமாலய கிரிபன் வகையை சேர்ந்த கழுகுகள், பருவ நிலை மாற்றத்தால் உடலின் சீதோஷ்ண நிலையை சீராக வைத்துக்கொள்ள தற்போது ஹிமாலயன் மலைப் பகுதிகளில் இருந்து வேதாரண்யம் கோடியக்கரை பறவைகள் சரணாலயத்திற்கு புலம்பெயர்ந்து வந்துள்ளன.

இங்கு வந்துள்ள கழுகு சுமார் 25 கிலோ எடை கொண்டது எனவும், இறந்த ஒரு மாட்டை அரை மணி நேரத்தில் உண்ணக்கூடியவை என்றும், இமய மலையில் பருவ நிலை மாற்றம், பனிப்புயல் காரணமாக இடம் பெயர்ந்து கோடியக்கரைக்கு வந்துள்ளது. இவை ஒரு சில நாட்கள் இங்கு தங்கி விட்டு மீண்டும் இமயமலைக்கே சென்று விடும் எனவும் வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-4)

# மொடேர்னா நிறுவன தடுப்பு மருந்துக்கும் அங்கீகாரம் கிடைக்க வாய்ப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் மருந்து நிறுவனமான மொடேர்னாவின் தடுப்பூசி பாதுகாப்பானது மற்றும் 94 வீதம் பயனுள்ளதாக இருப்பதாக அமெரிக்க நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்க அவசரகால அங்கீகாரம் வழங்கப்படலாம் எனக் கட்டுப்பாட்டாளர்கள் தெளிவுபடுத்துகிறார்கள்.

மொடேர்னாவின் தடுப்பூசியின் இரண்டு டோஸ் விதிமுறை மிகவும் பயனுள்ளதாக இருந்தது எனவும் 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசியைப் பயன்படுத்துவதில் எந்தவொரு பாதுகாப்புச் சிக்கல்களும் ஏற்படவில்லை என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

உணவு மற்றும் மருந்து நிர்வாகத்தின் பகுப்பாய்வின்படி இது அமெரிக்காவில் அனுமதிக்கப்பட்ட இரண்டாவது கொரோனா வைரஸ் தடுப்பூசியாக மாறக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் ஃபைசர்-பயோஎன்டெக் தடுப்பூசி வழங்கும் திட்டம் நேற்று தொடங்கப்பட்ட நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (நி-4)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2020-15.01.2021

## தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்



சார்வரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய், உங்கள் இராசியிலேயே பலம் பெற்றிருக்கின்றார். எனவே ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்தோடு பணி புரிவீர்கள். குருவின் பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிவதால் குடும்ப முன்னேற்றம் கூடுதலாக இருக்கும். தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

### ராகு-கேதுக்களின் ஆதிக்கம்

இம்மாதம் சர்ப்பக் கிரகங்களின் ஆதிக்கத்திற்குள் உங்கள் இராசி அடைபட்டிருக்கின்றது. 2 இல் ராகுவும், 8இல் கேதுவும் என்ற நிலையில் பாம்பு கிரகங்களின் சஞ்சாரம் உள்ளது. இருப்பினும் குருவினுடைய பார்வை, ராகு மீது பதிவதால் கொடுக்கல்-வாங்கல்கள் திருப்தியளிக்கும். கூடுதலாக விரயங்கள் ஏற்பட்டாலும் அவற்றைச் சமாளிக்கும் விதத்தில் நண்பர்கள் கைகொடுத்து உதவுவர். அஷ்டமத்தில் உள்ள கேது, சுக்கிரனோடு இருப்பதால் கொஞ்சம் அலைச்சல் அதிகரிக்கும். ஒரு சிலருக்கு இடமாற்றங்கள், வீடு மாற்றங்கள் இயற்கையாகவே அமையும்.

### மகரச் சனி சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், டிசெம்பர் 26 ஆம் திகதி 10 ஆம் இடமான மகர இராசிக்குச் செல்கின்றார். அது உங்களுக்கு தொழில் ஸ்தானமாகும். மகர இராசிக்கு அதிபதியான சனி பகவான், தொழில் ஸ்தானத்திலேயே சஞ்சரிப்பது யோகம்தான். தொழில் நடத்துபவர்களுக்கு எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். தொழிலை விரிவுபடுத்த எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள், 'சம்பளம் போதவில்லையே... விருப்ப ஓய்வில் வெளிவந்து சுயதொழில் தொடங்கலாமா?' என்று சிந்திக்க வாய்ப்புண்டு. அவர்களுக்கும் நல்ல பதில் கிடைக்கும்.

### மகர புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 3, 6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் டிசெம்பர் 30 ஆம் திகதி மகர இராசிக்கு வருகின்றார். தொழில் ஸ்தானத்தில் அவர் வரும் நேரம் அங்கு குருவும், சனியும் இணைந்திருக்கின்றார்கள். எனவே புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். புகழ்பெற்றவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுப்பர். சகோதர ஒற்றுமை பலப்படும். வெளிநாட்டில் இருந்து நீங்கள் எதிர்பார்த்த அனுகூலமான தகவல் வந்து சேரும். எதிரிகள் விலகிச் செல்வர். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவை தானாக வந்து சேரும்.




### தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் ஜனவரி 5 ஆம் திகதி தனுசு இராசிக்குச் செல்கின்றார். அவர் அங்குள்ள பஞ்சமாதிபதி சூரியனோடு இணையும் பொழுது, பிள்ளைகள் வழியில் நல்ல காரியங்கள் நடைபெறும்.

குறிப்பாக பெண் பிள்ளைகளின் சுபச்சடங்குகள் நடைபெறலாம். பிள்ளைகளின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். விலகிச்சென்ற வரன்கள் மீண்டும் வந்து மகிழ்ச்சியை வழங்கும். பெற்றோர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

## தொட்டது துலங்கும் தொல்லைகள் அகலும்



சார்வரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் சுக்கிரன், சப்தம ஸ்தானத்தில் இருந்து உங்கள் இராசியைப் பார்க்கின்றார். உங்கள் இராசியில் ராகுவும், 7 இல் கேதுவும் இருக்கின்றார்கள். குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. எனவே தொட்டது துலங்கும். தொல்லைகள் அகலும். கேட்டது கிடைக்கும். நினைத்தது நடக்கும்.

### ராகு-கேதுக்களின் ஆதிக்கம்

இம்மாதம் சர்ப்பக் கிரகங்களான ராகு-கேதுக்களின் ஆதிக்கத்தில் உங்கள் இராசி இருக்கின்றது. எனவே ஏற்றமும், இறக்கமும் கலந்த நிலை ஒருசிலருக்கு ஏற்படலாம். ஒரு நாள் வரவு வந்தால் மறுநாள் முழுமையாக செலவாகவே இருக்கும். ஒரு நாள் மகிழ்ச்சியான தகவல்களாகவே வந்தால் மறுநாள் மகிழ்ச்சியைக் கெடுக்கும் தகவல்களாக வரலாம். குறிப்பாக பணப்புழக்கம் அதிகமாக இருந்தால், மனக்கவலை அதைக்காட்டிலும் அதிகமாகவே இருக்கும். இருப்பினும் குருபார்வை இருப்பதால் காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடிவிடும்.

### மகரச் சனியின் சஞ்சாரம்

இதுவரை உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான், டிசெம்பர் 26 ஆம் திகதி 9 ஆம் இடத்திற்குச் செல்கின்றார். அஷ்டமத்துச் சனி விலகுகின்றார். எனவே தடைகள் அகலும். தனவரவு உண்டு. மூடிக்கிடந்த தொழிலுக்கு திறப்புவிழா நடத்திப் பார்ப்பீர்கள். பாக்கிய ஸ்தானம் பலம் பெறும் இந்த நேரத்தில், பெற்றோர் வழி உறவில் இருந்த விரிசல் அகலும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர். உயர்ந்த மனிதர்களின் பழக்கத்தால் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவீர்கள். அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும். வெளிநாடு அல்லது வெளி மாநிலம் சென்று பணிபுரிய விரும்புபவர்களுக்கு அதுவும் கைகூடலாம். பொதுவாக இந்த சனிப்பெயர்ச்சி உங்களுக்கு சாதகமான பெயர்ச்சிதான்.




### மகர புதன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு 2, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். தன பஞ்சமாதிபதி 9 ஆம் இடத்தில் வந்து சேரும்பொழுது, எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலான நற்பலன் கிடைக்கும். எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். இதுவரை கடுமையாக முயற்சி செய்தும் நடைபெறாத காரியங்கள் இப்பொழுது எளிதில் நடைபெறும். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். தொழில் ரீதியாக நீங்கள் எடுத்த முயற்சிக்கு தந்தை வழி உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வாகனம் வாங்கும் யோகம் உண்டு.

### தனுசு சுக்கிரன் சஞ்சாரம்

உங்கள் இராசிக்கு அதிபதியான சுக்கிரன் 6 ஆம் இடத்திற்கு அதிபதி யாவார். அவர் ஜனவரி 5 ஆம் திகதி தனுசு இராசிக்கு வரும் பொழுது அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கின்றார். மறைந்த சுக்கிரன் நிறைந்த தனலாபத்தை உங்களுக்கு கொடுக்கலாம். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜயோகம்' என்பதற்கேற்ப நல்ல திருப்பம் ஏற்படும். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்கு நல்ல அங்கீகாரம் கிடைக்கும். சொத்துக்கள் வாங்கும் யோகம்கூட உண்டு.

இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

(தொடரும்)

# உயர் நீதிமன்ற கட்டடத்தில் தீ; தீவிர விசாரணைக்கு உத்தரவு



(கொழும்பு)

கொழும்பு உயர் நீதிமன்ற கட்டட வளாகத்தில் ஏற்பட்ட தீப் பரவல் தொடர்பான விசாரணைகள் தற்பொழுது குற்றப்புலனாய்வு மற்றும் அரசாங்கத்தின் இரசாயனப் பரிசோதனை திணைக்களங்கள் ஆகிய வற்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 4.45 மணியளவில் கொழும்பு உயர் நீதிமன்றம் அமைந்துள்ள கட்டட வளாகத்தில் சிதைவுற்ற பொருட்கள் களஞ்சியசாலையில் தீப் பரவல் ஏற்பட்டுள்ளது.

எனினும் இந்த தீயினால் உயர் நீதிமன்றத்தின் எந்தவொரு அலுவலகத்திற்கும் அல்லது கோப்புகள் உள்ளிட்ட எந்தவொரு பொருட்களுக்கும் பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் நீதி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பீ.கே. மாயாதுன்ன உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த சிதைவுற்ற பொருட்கள் களஞ்சியசாலை உயர் நீதிமன்றம் அமைந்துள்ள பிரதான கட்டடத்தின் பின்புறத்தில் அமைந்துள்ள கட்டடத்தின் தரைத் தளத்தில் இருந்ததாகவும் இதற்கமைவாக இந்தத் தீயின் மூலம் பாதிக்கப்பட்டமை சிதைவுற்ற பொருட்கள் களஞ்சியசாலை மாத்திரமேயாகும் என்றும் அமைச்சின் செயலாளர் மேலும் கூறினார்.

இதேபோன்று இந்த தீ தற்பொழுது முழுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தீ ஏற்படுவதற்கான காரணம் வெளியாகவில்லை என்பதுடன் இது தொடர்பில் விரைவாக விசாரணைகளை மேற்கொள்ளும் நடவடிக்கை தற்பொழுது குற்றப்புலனாய்வு திணைக்களம் மற்றும் அரசாங்கத்தின் இரசாயன பரிசோதனை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (நி)

# தீப்பரவல் ஏற்பட்ட உயர் நீதிமன்றத்தை பார்வையிட்ட-சஜித்



(கொழும்பு)

இலங்கையில் நேற்று முன்தினம் மாலை தீப் பரவல் ஏற்பட்ட உயர்நீதிமன்றத்தின் கட்டடத் தொகுதியை எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ நேரில் பார்வையிட்டார்.

அதிரடிப் படையினர் மற்றும் மெய்ப்பாதுகாவலர்கள் சகிதம் கடும் பாதுகாப்புடன் நேற்றிரவு அங்கு சென்ற சஜித் பிரேமதாஸ, தீப் பரவல் ஏற்பட்ட உயர்நீதிமன்றத்தின் கட்டடத் தொகுதியைச் சுற்றிப் பார்வையிட்டார்.

அவர் அங்கிருந்து வெளியேறும்போது, ஊடகங்களிடம் தீப் பரவல் தொடர்பில் அதிர்ச்சியை வெளிப்படுத்தினார்.

"உயர்நீதிமன்றத்தில் தீப் பரவல் எப்படி ஏற்பட்டது என்ற உண்மை கண்டறியப்பட வேண்டும்.

இது தொடர்பில் நீதியான விசாரணையை அரசு உடனடியாக நடத்தி பாராளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்" என்றும் அவர் வலியுறுத்தினார். (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2184

**தருண்**

மனைவியை பைக்ல ஏத்திக்கிட்டு போனா ஏன் பொலிஸ்காரங்க நிறுத்துறது இல்ல தெரியுமா...



ஏற்கனவே பிரச்சினையைத்தான் கூட்டிக்கிட்டு போறான் நாம ஏன் இன்னும் பிரச்சினைய குடுக்கனும் என்று தான்...!

**பூமிகா**

வல்லாரை கீரை சாப்பிட்டா நல்லா ஞாபகசக்தி அதிகரிக்குமாம்...



போன மாதம் வல்லாரை சாப்பிட்டன் அதுமட்டும் தான் ஞாபகம் இருக்கு மத்ததெல்லாம் மறந்திடுச்சு..!

**வனஜா**

என்ன மச்சான் அன்னைக்கு மருதனார் மட சந்தையில கத்தரிக்காய் மலிவு எண்டு வாங்க போனியாம் 1 கிலோ எவ்வளவு போட்டான்...



ஏன்டா கத்துற .. கத்தாதடா...!

**தீபிகா**


பூமியை சூடாக்க 30.000 ஆயிரம் ரூபாய்க்கு ஏசி வாங்கும் நாம்...



பூமியை குளிர்விக்க 30 ரூபாய்க்கு ஒரு மரக்கன்று வாங்குவதில்லை...!

**விமல்**

காயம் இல்லாமல் கனவுகள் காணலாம் ஆனால் வலி இல்லாமல் வெற்றிகள் காண முடியாது....!



**ஆதவன்**

என்னதான் யுத்தம் முடிஞ்சு எண்டு சொன்னாலும் மண்மூடை என்னவோ யாழ்ப்பாணத்தாரை விடுறதா இல்லை




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தலில்

(கொழும்பு)

இலங்கையில் மேலும் சில பகுதிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு முதல் உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி களுத்துறை மாவட்டத்தின் தொட்டவத்தவும் மொனராகலை மாவட்டத்தின் படல்கும்புர, அலுபொத ஆகிய பகுதிகளை தனிமைப் படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவித்து இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா உத்தரவு பிறப்பித்தார்.

குறித்த பகுதிகளில் கொவிட்- 19 தொற்று உறுதியானவர்கள் அடையாளங்காணப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# வெலிசறை வைத்தியசாலையில் கொரோனா நோயாளி தப்பியோட்டம்



(வெலிசறை)


கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகிய நிலையில் வெலிசறை சுவாச நோய்க்கான தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஒருவர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

இந்த நிலையில், குறித்த நபரைத் தேடும்பணிகளில் ஈடுபட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மருதானை பகுதியை சேர்ந்த 43 வயதுடைய குறித்த நபர் சுவாச பிரச்சினை காரணமாக வைத்தியசாலையில் அனுமதிப்பட்டுள்ளார்.

அதன் பின்னர் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் அவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி இருந்தமை இனங்காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# விமான விபத்து தொடர்பான விசாரணைகள் ஆரம்பம்



(கொழும்பு)

இலங்கை விமானப் படைக்கு சொந்தமான PT-6 ரக பயிற்சி விமானம் ஒன்று விபத்துக்குள்ளானமை தொடர்பான விசாரணைகளை அதற்காக நியமிக்கப்பட்ட குழு ஆரம்பித்துள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விமானப் படை ஊடகப் பேச்சாளர் குரூப் கப்டன் துஷான் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலை - சீனன்குடா விமானப் படைத் தளத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த குறித்த விமானம் கந்தளாய், சூரியபுர ஜனரஞ்சன வாவிக்கு அருகில் விபத்துள்ளானது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# புதிய வகை பறவை இனம் கண்டுபிடிப்பு



(கொழும்பு)

இலங்கையில் புதிய வகை பறவை இனமொன்றை கொழும்பு பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட புதிய பறவைக்கு சிங்கள மொழியில் அனுமன் ஒலிவியா எனப் பெயர் வைக்கப்பட்டுள்ளது. (நி-4)

# போலி நாணயத் தாள்கள் மீட்பு

(குருநாகல்)

குருநாகல், கோகரெல்ல பகுதியில் நூறு 5000 ரூபா போலி நாணயத் தாள்களை நேற்று முன்தினம் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

அத்துடன் இந்த பறிமுதல் நடவடிக்கையின் போது பொலிஸார் 22 மற்றும் 23 வயதுகளை யுடைய இரு சந்தேக நபர்களையும் கைது செய்தனர்.

போலி நாணயம் அச்சிடல் மற்றும் அது தொடர்பான விடயங்களை அறிந்தால் 0112422176 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கனவு கண்டது யார்?

ஒருநாள் காலை நேரம். ஒரு குரு படுக்கையை விட்டு எழுந்து கொண்டார். உடனே சீடர்களைப பார்த்து,எல்லோரும் இப்படி வாங்க... என்றார்.

எல்லோரும் வந்தார்கள் வேகமாக. என்ன வேண்டும் உங்களுக்கு என்கின்ற மாதிரி எல்லோரும் குருவைப் பார்த்தார்கள் பயபக்தியோடு...

குரு அந்த சீடர்களைப் பார்த்து இதோ பாருங்கள்.. இப் பொழுது நான் ஒரு சிக்கலான விவகாரத்திலே மாட்டிக் கொண்டிருக்கின்றேன். அதை நீங்கள் தீர்த்து வைத்தால் நல்லது என்றார் குருநாதர். சீடர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன இது இவர் இப்படிச் சொல்கிறார். நமக்கு என்ன விவகாரம் என்றாலும் தீர்த்து வைப்பவர் நம் குருநாதர். அவருடைய விவகாரத்தை நாம் தீர்த்து வைக்கிறதா? ஆச்சரியமாக இருக்கின்றதே. குரு நாதருக்கே சிக்கலா? என்று யோசித்தார்கள். இருந்தாலும் மிகப் பணிவாக கேட்டார்கள்.

சுவாமி,உங்களுக்கே சிக்கலா?இந்த உலகத்து சிக்கல்களுக்கும் சிரமங்களுக்கும் அப்பாற்பட்டவர் அல்லவா தாங்கள்? அப்படிப்பட்ட உங்களுக்கு சிக்கல் என்றால் அது எப்படி? என்றார்கள்.

எனக்கு ஏற்பட்டிருக்கின்ற சிக்கல் அவ்வளவு பெரிது. மிகவும் பெரிய விவகாரம் அது? என்றார் குரு.

கொஞ்சம் விபரமாக சொல்லுங்கள்.. என்றார்கள் இவர்கள். இப்பொழுது அந்த குரு விபரத்தை சொன்னார். அதாவது நேற்று ராத்திரி நான் ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவிலே நான் ஒரு பட்டாம் பூச்சியாக மாறிவிட்டேன். அப்படி மாறி.. ஒவ்வொரு மலராக பறந்து போய் உட்கார்ந்து தேன் சாப்பிட்டேன்..என்றார்.

சீடர்கள் இதைக் கேட்டதும் மிகவும் திகைத்துப் போய் விட்டார்கள். என்ன இது...இது பெரிய பிரச்சினையா. ஒரு சாதாரணக் கனவு கண்டதுக்காகவா இந்த காலை வேளையிலே நம்மளையெல்லாம் குருநாதர் இவ்வளவு அவசரமாக கூப்பிட்டிருக்கின்றார் என்று நினைத்தார்கள். இருந்தாலும் கேட்டார்கள்.

இதிலே என்ன சிக்கல் சுவாமி...கனவு என்பது எல்லோருக்கும் வரத் தானே செய்யுது.. என்றார் ஒரு சீடர்.

சீடர்களின் பிரச்சினை அது இல்லை..நான் இன்றைக்கு காலையில் கண்ணு முழித்துப் பார்த்த பொழுது, நான் நானாக மறுபடியும் மாறி விட்டேன் என்பதைத் தெரிந்து கொண்டேன்..இதிலே சிக்கல் என்னவென்றால், இப்பொழுது அந்தப் பட்டாம்பூச்சி தான் நானா ஆகிவிட்டதாக கனவு கண்டிருப்பது தான். ஒரு மனிதன் பட்டாம்பூச்சியாக ஆகுவதாக கனவு காண முடியும் என்றபொழுது அந்தப் பட்டாம்பூச்சியும் மனிதனாக ஆகுவதாக கனவு காண முடியும் இல்லையா? இப்பொழுது எனக்கு யதார்த்த நிலை தெரியவேண்டும். எது நிஜம் என்று தெரியவேண்டும். நேற்று ராத்திரி நான் கண்டது கனவா? அல்லது இது பட்டாம் பூச்சி கண்டிருக்கின்ற கனவா? இது தான் குரு கேட்ட கேள்வி..

இதைக் கேட்டதும் சீடர்கள் மிகக் குழம்பிப் போய் விட்டார்கள்.சுவாமி இது வரைக்கும் நாங்கள் தூங்குகின்ற பொழுது பார்க்கிறது கனவு என்றும் முழித்துக் கொண்டிருக்கின்ற பொழுது பார்க்கிறது நனவு என்றும் நம்பிக் கொண்டிருந்தோம். இப்பொழுது எங்களை நீங்கள் குழப்பிவிட்டீர்கள். இதற்குப் பதில் சொல்ல எங்களுக்கு சக்தி இல்லை..என்று சொல்லிவிட்டார்கள்.அதன்பின்பு அந்த குரு சொன்னார்.

நினைவு தான் முக்கிய அம்சம்-முடிவுக் கட்டம் என்றால் பகலின் நினைவுகளை விட இரவின் கனவுகளே மிகவும் உண்மை.ஒருத்தன் தூங்கப் போனால்.. தூங்கிக் கொண்டே இருந்தால் அவன் காணும் கனவு பொய்ப்பதை அவன் உணரமாட்டான். ஒவ்வொரு கனவும் காணும் போது மிகவும் உண்மையாகத் தான் தெரிகின்றது. ஒரு கனவு கூட உண்மை இல்லை என்று கனவிலே தோன்றுவதே இல்லை என்றார் குரு. அகில வாழ்வு அத்தனையும் சொப்பனம் கண்டாய்.. என்றார் தாயுமானவர்.

ஆகையினாலே எங்கள் கனவிலிருந்த நாம் என்றைக்கு முழித் துக் கொள்கிறோம் என்பது தான் முக்கியம். ஒருத்தர் வந்தார். காலில் கட்டுடன் வந்தார். என்னங்க காலிலே கட்டு? என்றேன்.


நான் நேற்று இரவு தூக்கத்திலே எங்கள் வீட்டுக் கூரையில ஏணியை சாற்றி வைத்து இறங்கிய பொழுது வழுக்கி விழுந்து காலை உடைத்துக் கொண்டேன் என்றார்.

உங்கள் வீட்டிலே தான் ஏணியே கிடையாதே சேர் என்றேன். உண்மை தான் சேர். நான் கீழே விழுந்து முழித்துக் கொண்ட பின்பு தானே ஏணி.. இல்லை என்பது எனக்கு ஞாபகம் வந்தது..என்றார்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

21

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



(3) (அ) அரசியலைமப்பிற்கான ஒன்பதாம் அட்டவைணயின் நிரல் III இல் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் ஆக்கப்பட வேண்டிய ஏதேனும் உத்தேச நியதிச் சட்டத்தின் மீது பாராளுமன்றத்தைக் கலந்தாலோசிப்பதற்கு நாடுகின்ற ஏதேனும் மாகாண சபையிடமிருந்து தொடர்பாடலொன்று பெறப்படும் போதெல்லாம், சபாநாயகர், கிடைக்கக்கூடிய முதலாவது சந்தர்ப்பத்தில் அத்தொடர்பாடல் கிடைக்கப்பெற்றது தொடர்பாகப் பாராளுமன்றத்திற்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய தொடர்பாடலானது அதன் மேல் சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) பாராளுமன்றம், சட்டவாக்க நிலையியற் குழுவின் அறிக்கையை ஆராய்ந்த பின்னர், மாகாண சபையிடமிருந்து அத்தகைய தொடர்பாடல் கிடைக்கப்பெற்ற தினத்திலிருந்து இரண்டு மாதங்களினுள், உத்தேச நியதிச்சட்டம் தொடர்பாகப் பாராளுமன்றத்தின் கருத்துக்களை உரிய மாகாண சபைக்கு அனுப்பிவைக்கும்படி செயலாளர் நாயகத்துக்குப் பணிப்புரை வழங்குதல் வேண்டும்."

### சட்டமூலங்கள் - இரண்டாம் மதிப்பீடு

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 55.**

(1) சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒருவாரத்திற்கு முற்படாத ஒரு திகதிக்கு இரண்டாவது மதிப்பீட்டிற்காக ஒதுக்கப்படல் வேண்டும்.

(2) ஏதாவது சட்டமூலமோ அல்லது அச் சட்டமூலத்தின் ஏதாவது ஏற்பாடோ அரசியலைமப்பிற்கு முரணானதாகவுள்ளதா? என்பைதத் தீர்மானிப்பதற்கு அரசியலைமப்பின் 121 ஆம் உறுப்புரையின் கீழ் உயர்நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் கோரப்பட்டு அத்தகைய ஆற்றுப்படுத்தலின் அல்லது மனுவின் பிரதியொன்று சபாநாயகாரிடம் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்தில்,

(அ) அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டதன் பின்னர் அல்லது அத்தகைய மனு தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் கூடும் பாராளுமன்றத்தின் முதலாவது நாள் கூட்டத்தின் போது சபாநாயகரினால் அத்தகைய ஆற்றுப்படுத்தல் அல்லது மனுத் தாக்கல் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்குத் தெரிவிக்கப்படும் வரை அல்லது அத்தகைய ஆற்றுப்படுத்தலோ, மனுத்தாக்கலோ செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று வாரங்கள் முடியும் வரை இவற்றுள் எது முதலில் நிகழ்கின்றதோ அதுவரை அத்தகைய சட்டமூலம் தொடர்பாக எந்நடவடிக்கையும் எடுக்கப்படலாகாது.

(இ) உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு பெறப்பட்டதன் பின்னர் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினைச் சபாநாயகர் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன் அவ்வறிவித்தலின் மீது விவாதமெதுவும் அனுமதிக்கப்படுதலுமாகாது.

### இரண்டாம் மதிப்பீட்டில் - விவாதம்

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 56.**

சட்டமூலம் ஒன்றின் இரண்டாம் மதிப்பீட்டின் போது சட்டமூலத்தின் பொதுத் தகைமைகளையும் கொள்கைகளையும் உள்ளடக்கிய விவாதமொன்று எழலாம்.

### சட்டமூலங்கள் மீதான குழுநிலை

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 57.**

சட்டமூலமொர்ன்று இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டதும் அமைச்சரவையின் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினரல்லாத அமைச்சர், அல்லது பிரதி அமைச்சர் ஒருவரினால் பிரேரிக்கப்படும் பிரேரணையின் மேல் அச்சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.

ஆயினும், அமைச்சரவையின் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினரல்லாத அமைச்சர், அல்லது பிரதி அமைச்சர் ஒருவரினால் செய்யப்பட்ட பிரேரணையின் மேல் பாராளுமன்றம் அவ்வாறு முடிவு செய்தால், வருடாந்த அல்லது குறைநிரப்பு ஒதுக்கீட்டுச் சட்டமூலம் தவிர்ந்த சட்டமூலமொன்று சபாநாயகரினால் பெயர் குறித்து நியமிக்கப்பட வேண்டிய விசேட குழுவொன்றிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு அல்லது பொருத்தமான துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படலாம்.

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 58.**

சட்டமூலமொன்று விசேட குழுவொன்றிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு அல்லது பொருத்தமான துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள போது அக்குழுவானது அறிக்கையிடும் வரை அச்சட்டமூலத்தின் மீது மேற்கொண்டு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதலாகாது.

### குழுநிலையிலுள்ள சட்டமூலங்கள் மீதான நடைமுறை

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 59.**

ஏதேனும் சட்டமூலம் 57 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் கீழ் குழுவொன்றிற்கு ஆற்றுப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில், அத்தகைய குழு அதன் பல்வேறு ஏற்பாடுகளையும் பிரேரிக்கப்பட்ட எவையேனும் திருத்தங்களையும் பற்றி கலந்துரையாட வேண்டுமென்பதுடன், குழு அதன் அமர்வினை ஒத்திவைக்கலாம். அது முழுப் பாராளுமன்றக் குழுவாகவிருப்பின் சந்தர்ப்பம் எழும்போது காலத்திற்குக்காலம் அதன் முன்னேற்றத்தை அறிக்கையிடலாம்.

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 60.**

குழுவின் தவிசாளர் அல்லது செயலாளர் நாயகம் சட்டமூலத்தின் ஒவ்வொரு வாசகத்தினதும் இலக்கத்தை ஒன்றன் பின் ஒன்றாக வாசித்தல் வேண்டும்.

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 61.**

ஒரு வாசகத்திற்கு அல்லது வாசகங்களிற்கு அச்சட்டமூலத்தின் விடயப்பொருளிற்கு இயைபானதாகவும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளிற்கு வேறு வகையில் இசைந்தொழுகுவதுமான திருத்தங்களை ஏதேனும் ஏற்பாடுகளை நீக்கி விடுவதன் மூலம், பதிலிடுவதன் மூலம் அல்லது உட்புகுத்தவதன் மூலம் அல்லது சேர்ப்பதன் மூலம் மேற்கொள்ளலாம்.

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 62.**

குழுநிலையில் சட்டமூலத்தின் அடிப்படைக் கொள்கை கலந்துரையாடப்படலாகாது என்பதுடன், அதன் விபரங்கள் மட்டுமே கலந்துரையாடப்படுதல் வேண்டும்.

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 63.**

ஒரு சட்டமூலத்தின் முற்பகுதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிவிற்கு முரணான எந்தவொரு திருத்தமும் பிரேரிக்கப்படலாகாது.

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 64.**

சட்டமூலமொன்று குழு நிலையில் மதிப்பிடப்பட்ட பின்னரும் அச்சட்டமூலம் தொடர்ந்து குழுநிலையிலுள்ள போதும் எவரேனும் உறுப்பினர் தவிசாளரின் அனுமதியுடன், ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட ஏதேனும் வாசகத்திற்குத் திருத்தமொன்றை பிரேரிக்கலாம்.

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 65.**

சட்டமூலத்தின் ஏதேனும் வாசகத்தின் பரிசீலனை சட்டமூலத்தின் எஞ்சியுள்ள வாசகங்கள் பரிசீலிக்கப்படும் வரையும் புதிய வாசகங்கள் சமர்ப்பிக்கப்பட முன்னரும் பிற்போடப்படலாம்.

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 66.**

(1) சட்டமூலத்தின் அட்டவணைகள் பரிசீலிக்கப்படும் முன் அச்சட்டமூலத்திற்குப் புது வாசகங்கள் சமர்ப்பிக்கப்படலாம். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் புது வாசகங்கள் முதல் மதிப்பீடு பெற்றவையாகக் கருதப்படல் வேண்டும். அதையடுத்து முறையே "அந்த வாசகம் இரண்டாம் மதிப்பீடு பெறுக" என்றும் "அந்த வாசகம் (அல்லது திருத்தப்பட்டவாறான வாசகம்) சட்டமூலத்துடன் 'சேர்க்கப்படுவதாக" என்றும் பிரேரணைகள் பிரேரிக்கப்படல் வேண்டும்.

(2) சட்டமூலத்திற்குரிய அட்டவணைகள் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டதும் புது அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படலாம். அங்ஙனம் சமர்ப்பிக்கப்படும் அட்டவணைகள் புது வாசகம் எவ்வாறு பரிசீலிக்கப்படுமோ அவ்வாறே பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு வாசகமும் அட்டவணையும் பிரேரிக்கப்பட்ட ஏதேனும் புதிய வாசகமும் அல்லது அட்டவணையும் பரிசீலிக்கப்பட்டதும் சட்ட மூலத்திற்கு முன்னுரை இருக்குமானால் அது கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் "இது சட்டமூலத்தின் முன்னுரையாக இருக்குமாக" என்ற பிரேரணை பிரேரிக்கப்படுதல் வேண்டும்.

(4) சட்டமூலத்தின் சட்டப்பெயருக்கு ஏதேனும் திருத்தம் அவசியமானால், அது இந்நிலையியற் கட்டளையிற் தரப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முடிவில் செய்யப்படுதல் வேண்டும்.

### சட்டமூலங்களின் மீதான குழுக்களின் அறிக்கைகள்

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 67.**

முழுப் பாராளுமன்றக் குழுவொன்று ஒரு சட்டமூலத்தைப் பரிசீலனை செய்து முடித்ததும் தவிசாளர் அச்சட்டமூலத்தைத் திருத்தங்களுடனோ அல்லது திருத்தங்களின்றியோ பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 68.**

சட்டமூலமொன்று ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள ஒரு துறைசார் மேற்பார்வைக் குழு, சட்டவாக்க நிலையியற் குழு அல்லது விசேட குழு அதன் விதப்புரைகளைத் தருகின்ற அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் அறிக்கையின் பிரதியொன்று ஒவ்வோர் உறுப்பினருக்கும் வழங்கப்படுதலும் வேண்டும்.

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 69.**

ஒரு சட்டமூலத்தின் விசேட குழுவின் அறிக்கையைத் தவிசாளர் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வறிக்கை சபாபீடத்தில் இடப்படுவதாக எனக் கட்டளையிடலாம் அல்லது பாராளுமன்றத்தால் பணிக்கப்படக்கூடியவாறான முறையில் கையாளப்படலாம். எந்தவோர் உறுப்பினரும் பிரேரிக்கும் பிரேரணை ஒன்றின் அடிப்படையில் சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவொன்றிற்கு ஆற்றுப்படுத்தப்படலாம் அல்லது விசேட குழுவின் அறிக்கை அச்சட்டமூலத்திற்குப் பொறுப்பாயுள்ள உறுப்பினர் பிரேரிக்கும் ஒரு நாளில் பரிசீலனை செய்யப்படுவதற்கென ஒதுக்கப்படலாம்.

(தொடரும்...)

# 36 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது

(கொழும்பு)


இலங்கை கடற்படையினரும் கரையோர பாதுகாப்பு படையினரும் இணைந்து இலங்கையின் பல்வேறு கடல் பரப்புக்களில் நடத்திய விசேட நடவடிக்கைகளில், சட்ட விரோதமாக இலங்கை கடற்பரப்புக்குள் உட்பிரவேசித்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததாக கூறப்படும் 36 இந்திய மீனவர்கள் 5 படகுகளுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்புக்குள் அத்து மீறும் வெளிநாட்டு மீனவர்கள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கடந்த மார்ச் மாதம் முதல் கொவிட் நிலைமை காரணமாக தடைப்பட்டிருந்த நிலையிலேயே, நேற்று முன்தினம் இந்த விசேட சுற்றிவளைப்பு இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள அனைத்து இந்திய மீனவர்களும் கடற்படை முகாம்களில் 14 நாள் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அதன்படி, அந்த தனிமைப்படுத்தல் காலம் நிறைவடைந்த பின்னர் உரிய சட்ட நடவடிக்கைகளுக்காக அவர்கள் உரிய தரப்பினரிடம் கையளிக்கப்படுவர் என கடற்படை பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா கூறினார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## தேங்காய் உடைப்பது ஏன்?

இறைவனுக்குச் செய்யப்படும் நைவேத்தியத்தில் தேங்காயும் வாழைப்பழமும் முக்கியமாக கருதப்படுகின்றன.

அதன் பின்னணியில் பல தத்துவங்கள் உள்ளன.

ஒரு காலத்தில் மனிதன் தன்னிடம் உள்ள மிருக குணங்களை கைவிடுவதைக் காட்டுவதற்கு அடையாளமாக ஆலயங்களில் விலங்குகளை பலி கொடுப்பதை வழக்கத்தில் வைத்திருந்தான். நாளடைவில் உயிர் பலியிடக் கூடாது என்ற ஜீவகாருண்யத்தை மகான்கள் வலியுறுத்தத் தொடங்கியதும் மிருக பலி கொடுக்கும் பழக்கம் குறைந்தது.

அதற்குப் பதில் வேறு என்ன செய்வது என்று நம் முன்னோர்கள் ஆய்வு செய்தபோது தேங்காய் உடைப்பதை மேற்கொள்ளத் தொடங்கினார்கள். அதுவே பிறகு கோவில்களிலும் வீடுகளிலும் இறைவனுக்கு பூஜை செய்யும் போது தேங்காய் உடைக்கும் பழக்கமாக மாறியது. நம் ஆணவத்தை அழித்துக் கொள்வதற்கு அடையாளமாகவே நாம் தேங்காய் உடைக்கிறோம்.

அதுமட்டுமல்ல... தேங்காய் இறை வடிவமாகக் கருதப்படுகிறது. ஞான நிலைக்கான சின்னமாகவும் பார்க்கப் படுகிறது. எனவேதான் இறை வழிபாட்டில் நாம் தேங்காய்க்கு முதலிடம் கொடுக்கிறோம்.

சிவபெருமானுக்கு மூன்று கண்கள் இருப்பதைப் போலத் தேங்காய்க்கும் மூன்று கண்கள் இருக்கிறது. மனிதன் பக்குவப்பட்ட பிறகே மூன்றாவது கண்ணான ஞானக் கண்ணைப் பெறுகிறான்.

அதனால் ஒரு மனிதன் பக்குவப்படுவதற்குக்கூட தேங்காய் ஒரு குறியீடாக உள்ளது. எனவே மூன்று கண்களுடன் இருக்கும் தேங்காய் இறைவழிபாட்டுக்கு உகந்ததாகக் கருதப்படுகிறது.

தேங்காய் தரும் தென்னை மரமும் வாழைப்பழம் தரும் வாழைமரமும் மக்களுக்கு தம்மிடம் உள்ள அனைத்தையும் தந்து உதவுகிறது. இவற்றின் எந்தப் பாகமும் வீண் ஆவதில்லை. மனிதனும் அப்படி உலகுக்குப் பயன்பட வேண்டும் என்பதையே இது குறிக்கிறது.

கோவிலில் அனைத்துப் பூஜைகளிலும் தேங்காய் உடைத்த பிறகே நிவேதனம் செய்வார்கள். தேங்காய் உடைப்பதே நம் ஆன்மாவை சுற்றியுள்ள மும்மலங்களைப் போக்குவதற்காகத்தான்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் மும்மலம் என்று சொல்லப் படுகிறது.

தேங்காய் மேல் இருக்கும் மட்டைதான் மாயை மலம் எனப்படுகிறது. மட்டை எனும் மாயை மலம் நீங்கினால் அடுத்து நார் எனும் கன்ம மலம் வரும்.

கன்ம மலம் நீக்கப்பட்டால் தேங்காயைச் சுற்றி இருக்கும் ஓடு (சிரட்டை) தெரியும். இந்த ஓடு ஆணவ மலத்தைக் குறிக்கும்.

ஓட்டை உடைத்தால் தேங்காய் இரண்டாக உடைந்து உள்ளே இருக்கும் வெள்ளைப்பருப்பு தெரியும். இந்த வெள்ளைப் பருப்பை பேரின்பம் என்பார்கள்.

ஆக வாழ்வில் மாயை, கன்மம், ஆணவம் என்ற மும்மலங்களையும் விரட்டினால்தான் பேரின்பத்தை பெற முடியும் என்பதை தேங்காய் உடைப்பதன் தார்ப்பரியமாகச் சொல்கிறார்கள்.

தேங்காய் உடைப்பதில் இன்னொரு தார்ப்பரியமும் உள்ளது. தேங்காய் உள்ளே இருக்கும் இளநீர் உலக ஆசைகளின் அடையாளமாகும். தன்னைச் சுற்றி இருக்கும் ஓடு ஒரு போதும் உடையாது. அது என்றென்றும் தனக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்று இளநீர் நம்புகிறது.

அதுபோலதான் நாம் இளம் வயதில் நமது உடம்பு அழகானது, உறுதியானது என்று நம்பி பல்வேறு ஆசைகளை வளர்த்துக் கொள்கிறோம். ஆனால் மனம் பக்குவம் பெறும் போது நமது உடம்பு சாசுவதமானது அல்ல என்பது புரியும்.

அதாவது இளநீர் வற்றும்போது அது தேங்காயின் பக்குவத்துடன் இரண்டறக் கலந்து விடும். ஓட்டுக்குள் இருக்கும் நீர் வற்றுவதால் ஒருபோதும் தேங்காய் கெட்டுப் போவதில்லை. மாறாக உறுதி பெறும். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## அப்துல்லா, மஹ்ரூப் இருவருக்கும் விளக்கமறியல்

(கொழும்பு)

முன்னாள் பிரதி அமைச்சர் அப்துல்லா, மஹ்ரூப் உட்பட இருவரையும் விளக்கமறியல் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2015 - 2019 இற்கு இடையில் லங்கா சதொசவின் வாகனங்களை தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டில் குறித்த இருவரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் குறித்த இருவரையும் இன்று வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (நி-4)

## 511 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுப் பரவலை அடுத்து விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் பல இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

அந்தவகையில் நேற்றுக் காலை 511 பேர் நாடு திரும்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நாடு திரும்பிய அனைத்து பயணிகளுக்கும் பி.சி.ஆர்.சோதனை மேற்கொள்ளப்பட்டு தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-4)

## தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய 48 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறி செயற்பட்ட குற்றச்சாட்டில் மேலும் 48 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை ஆறு மணிவரையான காலப்பகுதியிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். முகக் கவசங்களை அணியாமை மற்றும் சமூக இடைவெளியை கடைப்பிடிக்காத நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 200 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 180 |
| பச்சைமிளகாய் | 400 | 320 | 350 |
| தக்காளி | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 50 |
| கோவா | 80 | 80 | 80 |
| கரட் | 150 | 200 | 240 |
| பூசணி | 120 | 100 | 120 |
| புடோல் | 180 | 140 | 160 |
| வாழைக்காய் | 60 | 60 | 160 |
| சின்ன வெங்காயம் | 350 | 300-400 | 500 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 200 |
| பாகற்காய் | 500 | 400 | 400 |
| வெண்டிக்காய் | 160 | 100 | 160 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 160 |
| பயற்றங்காய் | 500 | 400 | 250 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 140 | 160 | 120 |
| கறிமிளகாய் | 300 | 300 | 280 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 400 |
| போஞ்சி | 280 | 220 | 240 |
| கத்தரிதம்புள்ள | 180 | 220 | 200 |
| கீரை - 1 பிடி | 80 | — | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 80 | 70-90 |
| இராசவள்ளி | 250 | — | 300 |
| வெங்காயப்பூ | 400 | — | — |
| முள்ளங்கி | 100 | 140 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | 100 |



# சிறுவர் அரங்கம்

## பத்து மாதம்

முல்லாவுக்கு சங்கீதம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று திடீரென ஆசை வந்து விட்டது.

சங்கீதம் கற்றுக் கொடுக்கும் ஒரு பாட்டு வாத்தியாரிடம் சென்றார்.

"ஐயா எனக்குச் சங்கீதம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசையாக இருக்கிறது. எனக்குச் சங்கீதம் கற்றுக் கொடுப்பீர்களா?" என முல்லா அவரிடம் கேட்டார்.

"சங்கீதம் கற்றுக் கொடுப்பது தானே என் தொழில் நிச்சயம் தங்களுக்குச் சங்கீதம் கற்றுக் கொடுக்கிறேன்" என்றார் பாட்டு வாத்தியார்.

" நான் என்ன கட்டணம் தரவேண்டும்?" என்று முல்லா கேட்டார்.


"முதல் மாதம் 100 பொற்காசுகள் தரவேண்டும் அடுத்த மாதம் அறுபது பொற்காசு கொடுத்தால் போதும், மூன்றாவது மாதம் ஐம்பது பொற்காசுகள் கொடுங்கள். இவ்வாறு கட்டணம் குறைந்து கொண்டே போகும் " என்றார் பாட்டு வாத்தியார்.

"சரி வருகிறேன் " என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் முல்லா.

"ஏன் புறப்பட்டு விட்டீர்கள்? சங்கீதம் கற்றுக் கொள்ளவில்லையா?" என பாட்டு வாத்தியார் கேட்டார்.

" ஒரு பத்து மாதம் கழித்து வரலாம் என்று நினைக்கிறேன்.

ஏனென்றால் உமது கட்டண முறையில் பத்து மாதம் கழித்து வந்தால் நீர்



இலவசமாகவே எனக்குக் கல்வி கற்றுத் தரவேண்டியிருக்கும். அதனால் பத்து மாதம் கழித்தே வருகிறேன்" என்று கூறிவிட்டு முல்லா நடந்தார்.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சென்றதில்லையா? வென்றதில்லையா?

வீரர்கள் மத்தியில் இலேசான பரபரப்பு. காதோடு வாய் பொருத்திக் குசுகுசுவெனப் பேசினார்கள். சிலர் கண்களாலேயே பேசிக் கொண்டார்கள்.

மன்னர் பிலிப் கடைப்பிடித்திராத அணுகுமுறை. விவேகமான அணுகுமுறை.

வீரர்களுக்குக் கொஞ்சம் குழப்பம். கொஞ்சம் மகிழ்ச்சி. சில நொடிகள் நிதானத்திற்குப் பின் அலெக்சாண்டர் பேச்சைத் தொடர்ந்தார்.

உங்களில் பலர் வறுமையில் வாடுவதாகக் கேள்விப்பட்டேன். அவற்றைப் போக்குவது தான் முதல் வேலை.

அடுத்தது தான் யுத்தம், வெற்றி, நாடு எல்லாமே.

சொன்னதோடு நிறு



டெல்பி ஆலயம்

த்திக்கொள்ளாமல் வறுமையின் வடிவத்திற்கு ஏற்ப உதவி செய்ய உத்தரவிட்டார்.

நிதி தேவைப்பட்டவர்களுக்கு நிதி. பொருள் தேவைப்பட்டவர்களுக்குப் பொருள். சொத்து கேட்டவர்களுக்குச் சொத்து. உணவு இல்லாதவர்களுக்கு உணவு. வீரர்களுக்கு உற்சாகம் தொற்றிக் கொண்டது.

அலெக்சாண்டரின் புரட்சிகரமான அணுகுமுறை நாடு முழுக்கப் பரவியது.

இது போன்ற விடயங்கள் காற்றை விட வேகமாகப் பரவி விடும். காற்றில் கலந்த செய்தி பெர்டிகாஸின் காதுகளையும் அடைந்தது. பெர்டிகாஸ் அலெக்சாண்டரின் நண்பர்.

என்ன ஆயிற்று இந்த அலெக்சாண்டருக்கு? எவ்வளவு விவேகமானவன். ஏன் இப்படியெல்லாம் செய்கின்றான்? உத்தரவுகளைப் பிறப்பித்து அவர்களை வழி நடத்தாமல் பொன்னும் பொருளும் கொடுத்து எதற்காக வீரர்களைக் குஷிப்படுத்த வேண்டும்?

அந்த அளவுக்குப் பணத்தாசை பிடித்துவிட்டதா மாசிடோனிய வீரர்களுக்கு?

நிறைய கேள்விகள். உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும். மாசிடோனியாவுக்கு விரைந்தார் பெர்டிகாஸ்.

(தொடரும்)

செய்த வினையும் செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறையாமாட்டா!
– கவியரசு கண்ணதாசன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வில் முறித்த விதுரனின் இராஜதந்திரம் காண்மினே!

குருசேத்திரத்தில் மகா பாரதப் போர் ஆரம்பமாயிற்று. போருக்கு முன்னதாக கிருஷ்ண பரமாத்மா துரியோதனனிடம் தூது செல்கிறார்.

தூது தோல்வியில் முடியும் என்பது கிருஷ்ணருக்கு நன்கு தெரியும். தூது தோல்வியில் முடிய வேண்டும் என்பதும் அவரின் விருப்பம்.

இதை நாம் கூறும்போது, அப்படியானால் கிருஷ்ண தூது எதற்கானது? என்ற கேள்வி எழும்.

இங்குதான் போருக்கு முன்னதாக இரண்டு கருமங்களை நிறைவேற்ற வேண்டிய தேவை கிருஷ்ணருக்கு இருக்கிறது.

அதில் ஒன்று கிருஷ்ணர் தூது செல்லாமல் பாரதப் போர் தொடங்கப்பட்டிருந்தால், கிருஷ்ணன் மீது கடும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்கும்.

தவிர, இன்றுவரை அஃது ஒரு சர்ச்சைக்குரிய விடயமாகப் பேசப்படும்.

எனவே ஆபத்பாந்தவனாகிய கிருஷ்ண பரமாத்மா தன் மீது குற்றம் விழுவதை விரும்பவில்லை.

ஆகையால் துரியோதனனிடம் தூது செல்ல வேண்டுமென முடிவு செய்தார்.

இதைவிட இன்னுமொரு விடயம் முக்கியமானதாகக் கிருஷ்ணருக்குத் தென்பட்டது.

அதாவது வில்லுக்கு விதுரன் என்பதே வழக்கு மொழி. மகா பாரதப் போரில் விதுரன் வில்லெடுத்துப் போரிட்டால், அவனை வெல்வதற்கு எவரும் இல்லை.

அதேநேரம் ஆளுந் தரப்பாகிய கௌரவர் சேனையில் இருந்து போரிடுவதுதான் தனது தர்மம் என விதுரன் முடிவு செய்வான்.

ஆக, போரில் விதுரனை வில்லெடுக்காமல் செய்ய வேண்டும். அதற்கு என்ன வழி என்று சிந்தித்த கிருஷ்ண பரமாத்மா துரியோதனனிடம் தூது செல்வதற்கு முன்னதாக, விதுரனின் வாசஸ்தலத்தில் தங்கியிருந்து தூது வெற்றி பெறுவதற்கான வியூகங்களை விதுரனுடன் பேசிக் கொண்டார்.

இதைச் செய்வதனூடாகத், தன் தூதுக்குத் துரியோதனன் இசையாமல் மறுத்தால்; அது அவன் மீது விதுரனுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தும்.

இந்தக் கோபம் விதுரனை போரில் நின்றும் விலத்தி வைக்கும். இதைச் செய்வது பாண்டவர்களின் வெற்றிக்கு மிக அவசியம் எனக் கிருஷ்ணர் கருதியதாலும் கிருஷ்ண தூது நடந்தாயிற்று.

சரி அப்படியானால், விதுரன் தன் சொந்தப் புத்தியில் வில்லை முறிக்கவில்லையா? என்று கேட்டால், அங்குதான் விதுரனின் புத்திசாதுரியம் வெளிப்படுகிறது.

அதாவது துரியோதனன் அதர்மத்தின் பக்கம் நிற்கிறான். கிருஷ்ண பரமாத்மாவோ பாண்டவர்களை வெற்றியடையச் செய்து தர்மத்தை நிலை நிறுத்த முற்படுகிறார்.

எனவே கௌரவர் சபையில் வில்லை முறித்து போரிடேன் என அறிவிப்பதுதான் மிக உயர்ந்த இராஜதந்திரம் என விதுரன் கருதுகிறான்.

சரி, இந்த ஒப்பீட்டுக் கதை எதற்கானது என்று கேட்டால்,

பெரும்பான்மைப் பலம் இல்லாத ஜன நாயகக் கட்டமைப்பில் பிரதமர், முதலமைச்சர், மேயர், தவிசாளர் ஆகிய பதவிகளை வெற்றுப் பெரும்பாடு படுவதைவிட, அதனைத் தவிர்ப்பதே நல்லது.

இதனையே விதுரன் உணர்த்தி நிற்க, நல்லூரும் யாழ்ப்பாணமும் நமக்கு அனுபவப்படுத்தி நிற்கின்றது.

## கொரோனா சிகிச்சை நிலையங்கள் புதிதாக ஸ்தாபிக்க தீர்மானம்

(கொழும்பு)

அதிக நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கக்கூடிய வசதிகளைக் கொண்ட வைத்தியசாலைகளை கையேற்று, அவற்றை கொரோனாவிற்கு சிகிச்சை வழங்கும் நிலையங்களாக அபிவிருத்தி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியின் தலைமையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற கொரோனாத் தொற்று ஒழிப்பிற்கான செயலணியின் மீளாய்வுக் கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

அதன்படி புதிய சிகிச்சை நிலையங்களை ஸ்தாபிப்பதற்கான நிதியினை சுகாதார அமைச்சினூடாக ஒதுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு மேலதிக செலவுகளை உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றினூடாக பெற்றுக் கொள்ளவும் நேற்றைய மீளாய்வுக் கூட்டத்தின் போது கலந்தாலோசிக்கப்பட்டதுடன் நாளாந்தம் 500 தொடக்கம் 600 வரையான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதால், அவர்களுக்கு தேவையான சிகிச்சைகளை வழங்குவதற்குரிய நிலையங்களை விரைவாக ஸ்தாபிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது. (நி-4)

## முல்லையில் கவனயீர்ப்பு போராட்டம்

(புனிக்கன்குளம்)

இலங்கை அரசை சிறுபான்மையினரின் மத உரிமைகளுக்கு மதிப்பளிக்குமாறும் கட்டாய தகனத்தை நிறுத்துமாறும் கோரி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று இடம்பெற்றது.

சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனத்தின் குறித்த போராட்டம் நாட்டில் தற்போது நிலவி வருகின்ற கொரோனோ நிலைமைகளை கருத்திற்கொண்டு சமூக இடைவெளியை பேணி முகக்கவசங்கள் அணிந்து சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக குறித்த போராட்டம் நடைபெற்றது.

போராட்டம் நிறைவடைந்ததன் பின்னர் சம்பவ இடத்திற்கு வருகை தந்த முல்லைத்தீவு பொலிஸார் போராட்டம் நடத்தியவர்களை தங்களிடம் அனுமதி பெறவில்லை என்று அச்சுறுத்தல் விடுத்ததோடு அவர்களிடம் வாக்கு மூலங்களையும் பெற்றுச் சென்றுள்ளனர். (5-4-281)

## கொரோனா தடுப்பூசியை இலங்கைக்கு கொண்டுவர நடவடிக்கை - வாசுதேவ

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தடுப்பூசி உலக சுகாதார ஸ்தாபனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் நாட்டிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைத்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

மேலும் பைசர் பயோஎன்டெக் தடுப்பூசியினை பெற்றுக்கொண்ட இருவர் உயிரிழந்துள்ள நிலையில் கொரோனா தடுப்பூசி தொடர்பாக அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

நாட்டில் கொரோனா தொற்று அதிகளவில் காணப்பட்டாலும், சனத் தொகைக்கு ஏற்றவாறு சிகிச்சை வழங்கும் முறை, நோயாளர்களை அடையாளம் காணும் நடவடிக்கை மற்றும் தனிமைப்படுத்தல் செயற்பாடு முறையாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார சுட்டிக்காட்டினார். (ம-03)

## நியமனம்

(குப்பிழான்)

வடமாகாணத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட 25 வருமானப் பரிசோதகர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம் சாள்ஸ் தலைமையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் யாழிலுள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது.(5-4-18)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** ஜோசப் இராணுவ படை முகாம், SFHQ Vanni, விமானப்படை முகாம், விமானப்படை முகாம் றேடார் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** அரசடிக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## கொள்ளை

(கரணவாய்)

யாழ்.நகரப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றும் வடமராட்சியைச் சேர்ந்த ஒருவரின் தங்கச் சங்கிலி அறுத்தெடுக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை பாடசாலை முடிந்து வீடு திரும்பும் போது கோப்பாய் ராசவீதியில் வந்த இரு கொள்ளையர்கள் ஒன்றரைப் பவுண் தங்கச்சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர். (5-4-60)

## சத்திய தரிசனம்



### சவாலைச் சந்திப்போம்

- ❖ உலகில் "அன்பு செய்யும் ஒரே இனம் மனித இனம் மட்டுமே. இங்கு ஒரே ஒரு மதம் மட்டுமே இருக்கிறது. அது தான் அன்பு மதம்.
- ❖ உலகில் "இதயத்தின் மொழி" என்ற ஒரே ஒரு மொழி மட்டுமே இருக்கிறது.
- ❖ அறிவு எதையும் பிரித்துப் பார்க்கும். ஆனால் அன்பு சேர்த்து வைக்கும்.
- ❖ ஒவ்வொரு அனுபவமும் ஏதாவது ஒரு உணர்வின் வழியாக, உடலளவில் விளைவை ஏற்படுத்தும்.
- ❖ உன்னைக் கடவுளின் வேலையாள் என்ற சிந்தனையை வளர்த்துக் கொள். உணர்ச்சிகளுக்கு அடிமையாகாதே.
- ❖ அலைபாயும் மனதால் சமுதாயத்திற்கு சேவை செய்ய முடியாது.
- ❖ ஒரு மனிதனின் நன்னடத்தை, அவனுடைய மனநிலையைச் சார்ந்திருக்கிறது
- ❖ வாழ்க்கை ஒரு சவால் அதனைச் சந்தியுங்கள். வாழ்க்கை ஒரு கனவு அதனை நனவாக்குங்கள். வாழ்க்கை ஒரு விளையாட்டு அதில் ஈடுபடுங்கள். வாழ்க்கை அன்புமயம் அதனை அனுபவியுங்கள்.

# பெண்கள் உலகக் கிண்ணம் 2022 போட்டி அட்டவணை வெளியீடு

2022ஆம் ஆண்டுக்கான பெண்கள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான அட்டவணையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

8 அணிகள் பங்கேற்கும் 12 ஆவது பெண்கள் ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நியூசிலாந்தில் அடுத்த ஆண்டு (2021) பெப்ரவரி- மார்ச்சில் நடத்த திட்டமிடப்பட்டு இருந்தது. கொரோனா அச்சம் காரணமாக இந்தப் போட்டி 2022ம் ஆண்டுக்கு ஒத்தி வைக்கப்பட்டது.



இதன்படி நியூசிலாந்தில் உள்ள 6 நகரங்களில் 2022 ஆம் ஆண்டு மார்ச் 4 ஆம் திகதி முதல் ஏப்ரல் 3ஆம் திகதி வரை இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆபிரிக்கா, இந்தியா ஆகிய நாடுகள் ஏற்கனவே தகுதி பெற்றுள்ள நிலையில் எஞ்சிய 3 அணிகள் எவை என்பதை நிர்ணயிப்பதற்கான தகுதிச்சுற்று இலங்கையில் அடுத்த ஆண்டு ஜுன் 26 ஆம் திகதி முதல் ஜுலை 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

உலகக் கோப்பை போட்டியின் தொடக்க லீக் ஆட்டத்தில் நியூசிலாந்து அணி தகுதிச் சுற்றின் மூலம் முன்னேறும் அணியை சந்திக்கிறது. (4)

# இந்தியன் சுப்பர் லீக்; ஐதராபாத் வெற்றி

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியின் 29-வது லீக் ஆட்டத்தில் ஐதராபாத் அணி 3-2 என்ற கோல் கணக்கில் ஈஸ்ட் பெங்காலை வீழ்த்தியது.

7 ஆவது இந்தியன் சுப்பர் லீக் கால்பந்து போட்டி கோவாவில் நடந்து வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற 29 ஆவது லீக் ஆட்டத்தில் ஐதராபாத் அணி 3-2 என்ற கோல் கணக்கில் ஈஸ்ட் பெங்காலை வீழ்த்தியது.

ஐதராபாத் அணியில் அரிடேன் சந்தனா (2 கோல்), ஹாலிசரன் நார்ஜாரி கோல் அடித்தனர்.

5ஆவது ஆட்டத்தில் ஆடிய ஐதராபாத் அணி பெற்ற 2 ஆவது வெற்றி இதுவாகும். அந்த அணி 3 ஆட்டங்களில் சமநிலை கண்டுள்ளது. ஈஸ்ட் பெங்கால் அணிக்கு இது 4 ஆவது தோல்வியாகும். (4)


# இருபது-20 உலகக்கிண்ணம் 2022
## தகுதிச் சுற்றுகளில் 86 அணிகள் மோதல்

2022ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள இருபது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில், பங்கேற்க 86 அணிகள் தகுதிச் சுற்றுகளில் மோதவுள்ளன.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான 15 இடங்களுக்கு தகுதிபெற அந்த அணிகள் யாவும் 13 மாதங்களில் 225 போட்டிகளில் விளையாடவுள்ளன. 4 படிநிலைகளாக அணிகளை தேர்வு செய்யும் இந்த நடைமுறை அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தொடங்குகிறது.

அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள இந்த உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்க தகுதிபெறுவதற்காக முதல் முறையாக ஹங்கேரி, ருமேனியா, செர்பியா அணிகள் போட்டியிடுகின்றன.

அதேபோல், ஐ.சி.சி. போட்டிகளில் முதல் முறையாக அவுஸ்திரேலியாவுக்கு எதிராக பின்லாந்து மோதவுள்ளது. அதேபோல் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்கான தகுதிச்



சுற்றுப் போட்டி ஒன்றை ஜப்பான் முதல் முறையாக நடத்தவுள்ளது.

தகுதிச்சுற்று போட்டிகள் ஆபிரிக்கா, அமெரிக்கா, கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக், ஐரோப்பா ஆகிய பிராந்தியங்களில் நடைபெறும்.

இதில் ஆபிரிக்கா, கிழக்கு ஆசியா மற்றும் பசுபிக் பிராந்தியங்களில் இருந்து தலா ஒரு அணி தகுதிபெறும். அதேவேளையில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பா பிராந்தியங்களில் இருந்து தலா 2 அணிகள் தகுதி பெறும். ஆசியாவிலிருந்து தகுதிச்சுற்று 'ஏ' மற்றும் 'பி' பிரிவுகளில் இருந்து தலா ஒரு அணி தேர்வாகும்.

இது தவிர, இந்தியாவில் நடைபெறும் 2021 இருபது-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் கடைசி 4 இடங்களை பிடிக்கும் அணிகள், ஐசிசி இருபது-20 தரவரிசை அடிப்படையில் நேரடியாகத் தகுதி பெற்ற நேபாளம், சிங்கப்பூர், ஐக்கிய அரபு அமீரகம், சிம்பாவே ஆகிய 4 அணிகள் சேர்ந்து மேலும் 8 இடங்களுக்கு தகுதிபெறும்.

இந்த இரு 8 அணிகள் பிரிவிலிருந்து தேர்வாகும் தலா 4 அணிகள், தொடரை நடத்தும் அவுஸ்திரேலியா, 2021 ஆம் ஆண்டு உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் அடிப்படையில் நேரடியாகத் தகுதி பெறும் 11 அணிகள் என 16 அணிகள் 2022 ஆம் ஆண்டு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் விளையாடும். (4)

# ஆஸி- இந்திய டெஸ்ட்; இந்திய அணி அறிவிப்பு

அவுஸ்திரேலிய அணியுடன் இன்று நடைபெறவுள்ள டெஸ்ட்டில் விளையாடும் 11 வீரர்கள் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

விராட் கோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 3 போட்டி கொண்ட ஒருநாள் தொடரை அவுஸ்திரேலியா 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்திய அணி 20 ஓவர் தொடரை 2-1 என்ற கணக்கில் வென்றது. அடுத்து இரு அணிகள் இடையே 4 டெஸ்ட் கொண்ட தொடர் நடைபெறுகிறது.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணியுடன் இன்று விளையாடவுள்ள டெஸ்டில் விளையாடும் 11 வீரர்கள் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

கோலி தலைமையிலான மயங்க் அகர்வால், பிரித்வி ஷா, புஜாரா, ரஹானே, ஹனுமா விஹாரி, அஸ்வின் , உமேஷ் யாதவ், முகமது ஷமி, பும்ரா ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

பண்டுக்கு பதிலாக விருதிமான் சாஹா விக்கெட் கீப்பராக விளையாட உள்ளார். ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சுப்மன் கில், கே.எல்.ராகுல் ஆகியோர் அணியில் இடம்பெறவில்லை. (4)

# பி.சி.சி.ஐ. உறுப்பினர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை

இந்திய கிரிக்கெட் வாரியத்தின் ஆண்டு பொதுக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி அகமதாபாத்தில் நடைபெறவுள்ளது.

இந்திய கிரிக்கெட் வாரியத்தின் ஆண்டு பொதுக் கூட்டம் வருடந்தோறும் கூட்டப்படும்.

இந்தக் கூட்டத்தில் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும்.

தற்போது கொரோனா காலம் என்பதால், கூட்டத்தில் பங்கேற்கும் அனைவரும் கொரோனா பரிசோதனை எடுத்துக் கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# பயிற்சியிலிருந்து ஸ்மித் விலகல்




பயிற்சியிலிருந்து விலகி சிகிச்சை மேற்கொண்டு வரும் அவுஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் ஸ்டீவ் ஸ்மித், இந்திய அணிக்கெதிரான முதல் டெஸ்டில் பங்கேற்பாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

முதல் டெஸ்டுக்காக வலைப்பயிற்சியில் ஈடுபட்டுவந்த ஸ்டீவ் ஸ்மித்துக்கு முதுகில் வலி ஏற்பட்டதால் மைதானத்தை விட்டு வெளியேறி, ஓய்வறையில் சிகிச்சை மேற்கொண்டுள்ளார்.

ஏற்கனவே அவுஸ்திரேலிய அணியில் டேவிட் வோர்னர் முதல் டெஸ்டிலிருந்து விலகினார்.

பிறகு மற்றொரு தொடக்க வீரருமான வில் புகோவ்ஸ்கியும் விலகினார்.

இதையடுத்து வேகப்பந்து வீச்சாளர் கெய்ல் அபாட்டுக்குக் காயம் ஏற்பட்டது. இதையடுத்து இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டிலிருந்து அவர் விலகினார். தற்போது, அவருக்கு பதிலாக ஹென்றிக்ஸ் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதன்பிறகு சகலதுறை வீரர் கேமரூன் கிரீனுக்குக் காயம் ஏற்பட்டது. அவர் உடற் தகுதித் தேர்வில் தேர்ச்சி அடைந்தால் முதல் டெஸ்டில் வாய்ப்பு அளிக்கப்படும் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் தெரிவித்துள்ளது. (4)

# லங்கா பிறீமியர் லீக் பரிசுத் தொகை

Sri Lanka Cricket LPL T20

LANKA PREMIER LEAGUE 2020

லங்கா பிரீமியர் லீக் தொடரின் இறுதிப் போட்டியில்,வெற்றியாளர்களுக்கு வெற்றிக் கிண்ணமும், 100,000 அமெரிக்க டொலர்களும், இரண்டாவது இடம் பிடித்தவர்களுக்கு 50,000 அமெரிக்க டொலர்களும் வழங்கப்படும்.

அத்துடன், இறுதிப் போட்டியின் சிறந்த வீரருக்கு 2,500 அமெரிக்க டொலர்களும், தொடரின் ஆட்ட நாயகராக தேர்வு செய்யப்படுபவருக்கு 8,000 அமெரிக்க டொலர்களும் வழங்கப்படும். (4)

## மீன், மரக்கறி...

வரை மூடப்படுவதாக வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் அறிவித்துள்ளார்.

சங்கானை மரக்கறி சந்தை வியாபாரிகள் 8 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று இடம்பெற்ற பிசிஆர் பரிசோதனையில் கண்டறியப்பட்டது.

அதில் தொற்றுள்ள வியாபாரி ஒருவர் நேற்று புதன்கிழமை சங்கானை மீன் சந்தைக்குச் சென்றுள்ளமை தொடர்பில் தகவல் கிடைக்கப் பெற்றதனையடுத்தே அந்தச் சந்தையும் மூடுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-3)

## மகாஜன மாணவி...

கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பாடசாலையில் தரம் ஏழு மற்றும் தரம் ஒன்பது ஆகிய வகுப்புகளில் கல்வி பயிலும் சகோதரிகளான இருவருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த மாணவிகள் இருவரும் மருதனார்மடம் தொற்றாளருடன் தொடர்பை பேணியவர்களுள் இரண்டாவது நாள் இனங்காணப்பட்ட கீரிமலை கூவில் பகுதியைச் சேர்ந்த தொற்றாளரின் மகள்கள் என அறிய முடிகின்றது.

மாணவிகள் இருவரும் கடந்த வாரம் பாடசாலைக்குச் சென்று வந்துள்ளதுடன், ஒன்பதாம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி கடந்த சனிக்கிழமையும் பாடசாலையில் இடம்பெற்ற பரீட்சை ஒன்றில் பங்குபற்றியுள்ளார்.

இந்நிலையில் குறித்த மாணவிகளின் வகுப்பினைச் சேர்ந்த மாணவிகள் மற்றும் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் என எண்பதுக்கும் மேற்பட்டவர்களை தனிமைப் படுத்தும் நடவடிக்கையில் சுகாதாரத் துறையினர் ஈடுபட்டுள்ளனர். (ம-3,18)

## கோவிட் - 19...

துள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 தொற்றால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 160ஆக உயர்வடைந்துள்ளது.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 34 ஆயிரத்து 732 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## கொரோனா நிலை...

தற்போதைய சூழ்நிலையில் நாடு முழுவதும் தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உத்தரவை நடைமுறைப்படுத்தவோ அல்லது தனிமைப்படுத்தவோ எந்தக் காரணமும் இல்லை என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இருப்பினும், 22 அல்லது 23ஆம் திகதிக்குள் நாட்டின் நிலைமையைப் பொறுத்து ஜனாதிபதியும் அரசும் தேவையான முடிவுகளை எடுப்பார்கள் என்று இராணுவத் தளபதி குறிப்பிட்டார். (ம-3)

## 2021 வரவு...

வல் ஆனல்டினால் கடந்த 2ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்தச் சமர்ப்பணத்தின்போது, ஆதரவாக 19 வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டிருந்தது.

வரவு-செலவுத் திட்டம் மீது இரண்டாவது வாக்கெடுப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சியின் 03 உறுப்பினர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் ஒருவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் வரவு - செலவுத் திட்டத்திக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 13 உறுப்பினர்களும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 10 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் வரவு - செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர். (ம-3,18,33)

## 68ஆக...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்றுப் புதன்கிழமை சங்கானை சந்தை வியாபாரிகள் நூறு பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்களில் எட்டுப் பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இதற்மைய சங்கானையில் 4 பேருக்கும் உடுவிலில் ஒருவருக்கும் பண்டத்தரிப்பில் ஒருவருக்கும் மானிப்பாயில் ஒருவருக்கும் வடலியடைப்பில் ஒருவருக்கும் இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 402 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்களில் ஏழாலையைச் சேர்ந்த இரண்டு பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

நேற்று ஒரே நாளில் யாழில் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் மருதனார்மடம் கொரோனா வைரஸ் கொத்தணி 68 ஆக அதிகரித்துள்ளது. (ம-3,18)

## கொரோனா...

மக்களுடைய ஒத்துழைப்பு இன்மையே என சுட்டிக் காட்டியிருக்கும் வட மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ்,

கொரோனா அபாயம் உள்ள பகுதிகளில் இருந்து எமது மாகாணத்திற்குள் நுழைந்தவர்கள் தொடர்பான தகவல்களை வழங்காமையே இந்த நிலைக்கு காரணம் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சமகால நிலைமைகள் குறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து கூறும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கின்றார். (ம-3)

## சங்கானை சுகா...

அடையாளம் காணப்பட்ட தெல்லிப்பளையைச் சேர்ந்த தொற்றாளர்கள் இருவர் அளவெட்டி பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தனர்.

குறித்த தொற்றாளர்களுக்கு சிகிச்சை வழங்கிய பெண் வைத்தியரின் கணவரே சங்கானை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி என்பதால் குடும்பத்தினருடன் அவர்கள் சுயதனிமையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இருந்தபோதிலும் பணிமனைச் செயற்பாடுகள் தொடர்வதாக சங்கானைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-3)

## பரா...

வந்த உறவினர்கள் நான்கு பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 402 பேருக்கு கோவிட் - 19 பரிசோதனை செய்யப்பட்டன.

இதில் ஏழாலையைச் சேர்ந்த 2 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது தவிர கோப்பாய் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருப்பவர்களோடு பராமரிக்க வந்திருக்கும் உறவினர்கள் நான்கு பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் இருந்து போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18)

## சுன்...

பொதுச் சந்தையில் நேற்றுப் புதன் கிழமை சந்தை வியாபாரிகள், சந்தைக் கட்டடத் தொகுதியில் வியாபாரம் மேற்கொள்ளும் வர்த்தகர்கள், சுன்னாகம் நகர வர்த்தகர்கள் என 406 பேருக்கான பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏனைய சுன்னாகம் நகர வர்த்தகர்களுக்கு நேற்றைய தினமும் பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தலுக்கமைய சுன்னாகம் பொதுச்சந்தை இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக்கிழமையும் மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3,18)

## எல்.பி.எல்...

முதல் தடவையாக இலங்கையில் நடைபெற்ற எல்.பி.எல் எனப்படும் லங்கா பிரிமியர் லீக் போட்டித் தொடரில் ஜப்னா ஸ்டாலியன்ஸ் எனும் யாழ்ப்பாண அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

இறுதிப் போட்டியில் காலி க்ளெடியேட்டர்ஸ் கழகத்தினை 53 ஓட்டங்களினால் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றியீட்டிய யாழ்ப்பாண அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 188 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காலி க்ளெடியேட்டர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.(ம-3)


மெகா பவர்
திகதி 16/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0705
O 16 36 45 74 79

மஹஜன சம்பத
திகதி 2020/12/16
சீட்டிழுப்பு இலக்கம் 4338
X 0 7 4 1 5 2

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 16.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2633
Z 05 12 74 80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 1079
F 0 1 8 6 0 2

தன நிதானய
திகதி - 2020.12.16
சீட்டிழுப்பு இலக்கம் - 375
N 20 30 63 82

சீட்டிழுப்பு வாரம் 35
சீட்டிழுப்பு திகதி 16/12/2020 புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 03 16 26
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 23,43,600/=

அத கோடிபதி
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1134
வர்ணம்: இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 16.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 91,202,665
வெற்றி இலக்கங்கள் 02 14 15 77 K

சனிதா
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 3464
சீட்டிழுப்பு திகதி: 16.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 36,279,609
வெற்றி இலக்கங்கள் 07 08 37 70 L

சுப்பர் ஜக்பொட் 25,44,750/=
திகதி: 16.12.2020
வெற்றி வாரம்: 3015
வர்ணம்: பச்சை
வெற்றி இலக்கங்கள் 05 34 37 61 மீனம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 9,148,160

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1308
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 16/12/2020
தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Y 29 53 61 73
அடுத்த சுப்பர் ஜக்பொட 58,346,656

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1716
சீட்டிழுப்பு திகதி 16/12/2020
வெற்றி இலக்கங்கள் 19 32 35 49 J
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 57,138,276
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

### வவுனியாவில் சட்டமா அதிபர் திணைக்களத்தின்

# திறப்பு விழாவில் கலந்துகொண்ட உயர் அதிகாரிக்கு பி.சி.ஆர்

(வவுனியா)

வவுனியாவில் அரச சட்டவாதி ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதையடுத்து சட்டமா அதிபர் திணைக்களத்திற்கான உத்தியோகபூர்வ விடுதி திறப்பு விழாவில் கலந்து கொண்ட பல்வேறு உயர் அதிகாரிகளிடமும் நேற்று பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா நீதிமன்றில் கடமையாற்றும் அரச சட்டவாதி ஒருவருக்கு நேற்று முன்தினம் இரவு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இதனையடுத்து குறித்த சட்டவாதியுடன் தொடர்புடையவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி வவுனியா, ஈரப்பெரியகுளம் பகுதியில் அமைக்கப்பட்ட சட்டமா அதிபர் திணைக்களத்திற்கான உத்தியோக பூர்வ விடுதி திறப்பு விழா நிகழ்வில் குறித்த அரச சட்டவாதி கலந்து கொண்டிருந்தார்.

இந்நிலையில் அந் நிகழ்வில் கலந்து கொண்ட வவுனியாவின் நீதித்துறையினர், மாவட்ட செயலக அரச உயர் அதிகாரி, பொலிஸ் உயர்மட்ட அதிகாரிகள் எனப் பலரிடமும் நேற்று பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா நீதிமன்றில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கும், வவுனியா சிறைச்சாலை கைதி ஒருவருக்கும் கடந்த திங்கட்கிழமை கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03,250,299)

### ஏ.ரி.எம் இயந்திரங்களில்

# பணத்தை திருடியவர் வவுனியாவில் கைது

(வவுனியா)

வவுனியா உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் தானியங்கி இயந்திரங்களில் இருந்து பணத்தை திருடிய நபர் ஒருவரை வவுனியா பொலிஸார் கைதுசெய்துள்ளதாக தெரிவித்தனர்.

குறித்த நபர் தானியங்கி இயந்திரங்களின் அருகில் சென்று நிற்பதுடன், வயது முதிந்தவர்களிற்கு உதவுவதுபோல அவர்களின் கடன் அட்டையையும், இரகசிய இலக்கத்தையும் திருடிவிட்டு வேறு கடன் அட்டையை அவர்களிடம் வழங்கி வந்துள்ளார். பின்னர் குறித்த காட் இயங்கவில்லை என அவர்களிடம் தெரிவித்துவிட்டு வங்கி கணக்குகளில் இருந்து இலட் சக்கணக்கான பணத்தினை திருடி வந்துள்ளார்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக வவுனியா பொலிஸில் 5 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் பொதுமக்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதன் நிமித்தம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்று முன்தினம் வவுனியாவில் உள்ள தானியங்கி இயந்திரம் ஒன்றிற்கு அருகில் வைத்து குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த நபர் பல்வேறு பகுதிகளில் இப்படியான திருட்டுச். சம்பவங்களில் ஈடுபட்டுள்ளமை தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-03)

# மனைவியை எரியூட்டி கொன்றவருக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனை

### மட்டக்களப்பு நீதிமன்றில் தீர்ப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தனது மனைவியை எரியூட்டி கொலை செய்த கணவருக்கு 10 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி N.M.M. அப்துல்லா முன்னிலையில் இந்த வழக்கு நேற்று தீர்ப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதிவாதிக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டமையால், 10 வருடங்கள், கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2 ஆம் திகதி 28 வயதான தனது மனைவியை பிரதிவாதியான கணவர் எரியூட்டி கொலை செய்தார்.

சம்பவம் தொடர்பில் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07 ஆம் திகதி பிரதிவாதிக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு தொடுநர் சார்பில் அரச சட்டத்தரணி மாதினி விக்னேஸ்வரன் மன்றில் ஆஜராகியிருந்தார். பிரதிவாதிக்கு 10 வருடங்கள் கடூழிய சிறைத் தண்ட னை விதித்த நீதிபதி, 5 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்பளித்துள்ளார்.

அபராதத்தை செலுத்த தவறும் பட்சத்தில்மேலும்03 மாதங்கள்சிறைத்த ண்டனை அனுபவிக்க நேரிடும் என நீதிபதி அறிவித்துள்ளார். (ம-03)




வட்டு தென்மேற்கு உப்புவயல் குளம் புனரமைப்பு

திறப்பு விழா

தியாகி அறக்கொடை நிதி உதவியுடன் இலங்கை இராணுவத்தினரால்
புனரமைக்கப்பட்டு 2020.12.17 சுபவேளையில் 10.00 மணிக்கு
இலங்கை இராணுவத் தளபதி
லெப்டினன்ட் ஜெனரல் ஷவேந்திர சில்வா
அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.
தலைமை
கலாநிதி சிதம்பர மோகன்
" யாழ். நண்பர்கள் " " வட்டு தென்மேற்கு விவசாய சம்மேளனம் "
கௌரவ விருந்தினர்கள்
மாண்புமிகு இந்திய தூதுவர் ஸ்ரீமான் S. பாலச்சந்திரன் அவர்கள்
யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் K. மகேசன் அவர்கள்
யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி
மேஜர் ஜெனரல் W.G.H.A செனரத் பண்டார (R.W.P., R.S.P., N.D.U)
யாழ். மாவட்ட கமத்தொழில் உதவி ஆணையாளர் இ. நிசாந்தன் அவர்கள்
கௌரவ பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை முன்னாள் துணைவேந்தர்
கௌரவ தர்மலிங்கம் நடனேந்திரன் தலைவர், வலி. மேற்கு பிரதேச சபை
பிறேமினி பொன்னம்பலம் செயலாளர், வலி. மேற்கு பிரதேச செயலகம், சங்கானை
Dr. மா. முரளிதரன் அரச கால்நடை வைத்தியசாலை, வட்டுக்கோட்டை
Dr. S. பரமசிவம்பிள்ளை D.A.M.(Cey)JP
கௌரவ தர்மலிங்கம் நடனேந்திரன் தலைவர், வலி. மேற்கு பிரதேச சபை
கன்பொல்லை தவம் அறக்கட்டளை நிறுவுனர்
கௌரவ தவராசா சத்தியதாஸ் அவர்கள்
கௌரவ சிவசுப்பிரமணியம் ரவிசங்கர்
(GLF)
கௌரவ கலாநிதி கந்தையா சிவராசா அவர்கள்
திரு. க. சத்தியேந்திரன் பொறுப்பதிகாரி, கமநல சேவைகள் மத்திய நிலையம், தொல்புரம்
பரநிருபசிங்கம் ஸ்ரீதரன்
அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோவில் உபதலைவர்
J/166 கிராமசேவகர் திரு. S. சிவகுமார் ஆகியோரின் பிரசன்னத்துடன்
மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படுகின்றது.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
செயலாளர் லோ. அஜந்தன்
(4982)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

### எல்லாப் பகுதிகளிலும்

# கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரிக்கும் அபாயம்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் தொற்றாளர் இனங்காணப்படும் அளவு 80 சதவீதத்திலிருந்து 69 ஆகக் குறைவடைந்துள்ள போதிலும், ஏனைய பகுதிகளில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.

எனவே ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னரான பண்டிகைக் காலத்தில் மேல் மாகாணத்திலுள்ள மக்களிடமிருந்து பொறுப்பான நடவடிக்கைகளை எதிர்பார்ப்பதாகவும் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

முழுநாட்டிலும் சுமார் 154 மரணங்கள் பதிவாகும் போது, அவற்றில் நூற்றுக்கு 56 சதவீதமான அதாவது 87 மரணங்கள் கொழும்பு மாநகர சபையை அண்மித்த பகுதிகளிலேயே பதிவாகியுள்ளன. இவ்வாறு அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றமைக்கும் மரணங்கள் பதிவாகின்றமைக்கும் ஏதுவான காரணியாதென இனங்காண்பது எதிர்காலத்தில் இந்த பகுதியில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு உதவும்.

கடந்த வாரத்திலும், கடந்த இரு தினங்களிலும் நாடளாவிய ரீதியில் இனங்காணப்பட்ட ஒட்டுமொத்த தொற்றாளர்களில் 80 சதவீதமானோர் மேல் மாகாணத்திலேயே இனங்காணப்பட்டனர். இந்த நிலைமை முதன் முறையாக 69 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

ஆனால் இதன் மூலம் கிடைத்துள்ள பாரதூரமான தகவல் யாதெனில், மேல் மாகாணத்திற்கு அப்பால் வைரஸ் பரவ ஆரம்பித்துள்ளமையாகும்.

இதன் காரணமாக மக்கள் பொறுப்புடன் செயற்படாவிட்டால் அரசாங்கத்திற்கும் சுகாதாரத்துறை அதிகாரிகளுக்கும் போக்குவரத்து கட்டுப்பாடு, சட்ட விதிகளை பிறப்பிக்க வேண்டியேற்படக்கூடும்.

எனவே எதிர்வரும் நாட்களில் குறிப்பாக ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னரான காலப்பகுதியில் மேல் மாகாணத்திலுள்ள மக்களிடம் மிகவும் பொறுப்பான செயற்பாடுகளை நாம் எதிர்பார்க்கின்றோம் என்றார். (ம-03)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-848)

பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு
பாடப் பதிவு
2021 ஆம் ஆண்டுக்கு தரம் 1 - O/L வரையான பாடப் பதிவு, அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி பாடக் குறிப்புப் புத்தகங்கள் வெளியாகி விட்டன. உடன் பெற்றுக் கொள்ளலாம்.
சிவ தயா அச்சகம்
இல. 92 (150), நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(மனோகரா தியேட்டர் சந்தி, NSB வங்கி அருகாமையில்)
077 396 5214, 021 221 9483
(4974)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.